# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 06 புதன்கிழமை (22.11.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:356


## சமாதான முயற்சியை ஊக்குவிப்பதற்கான

# புதிய மூலோபாயம் குறித்து இணைத்தலைமை ஆராய்வு!

## இருநாள் மாநாடு வாஷிங்டனில் ஆரம்பம்

வாஷிங்டன், நவம்பர் 22

**இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைமையான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்கும் இருநாள் மாநாடு அமெரிக்கத் தலைநகர் வூஷிங்டனில் ஆரம்பமாகி இருக்கின்றது.**

**இலங்கையில் தடைப்பட்டுப் போயிருக்கும் சமாதான முயற்சிகளை ஊக்குவித்து முன் நகர்த்துவதற்கான புதிய மூலோபாயங்கள் (New Strategies) குறித்து இணைத்தலைமைப் பிரதிநிதிகள் விவாதித்து வருகின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.**

கடந்த ஒக்ரோபர் 28, 29ஆம் திகதிகளில் அரசு - புலிகள் இடையே ஜெனிவாவில் இடம்பெற்ற பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்த பின்னர் இணைத் தலைமை நாடுகள் இலங்கை நிலைமை குறித்து விவாதிப்பதற்காக வாஷிங்டனில் கூடியுள்ளன.

நோர்வேயின் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், ஜப்பானின் சமாதானத் தூதர் யசூசி அகாஷி, ஐரோப்பிய ஒன்றியத்தின் பிர்திநிதி பெனிட்டா வோல்ட்னர், அமெரிக்காவின் பிரதிநிதி ரிச்சாட் பௌச்சர் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

கடைசியாக பிரெஸெல்ஸ் நகரில் நடைபெற்ற இணைத்தலைமையின் மாநாட்டின் முடிவில், இரண்டு தரப்புகளும் கடைப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்தவின் இந்திய விஜயம் சனியன்று ஆரம்பம்

கொழும்பு, நவ.22

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்வரும் சனிக்கிழமை இந்தியா பயணமாகிறார். வட மாநிலத்திலுள்ள தெஹ்ராடுன் நகரில் ஆரம்பமாகவிருக்கும் ஆசிய நாடுகளின் மேயர்கள் மாநாட்டுக்குப் பிரதம விருந்தினராக ஜனாதிபதி அழைக்கப்பட்டிருக்கிறார். அதில் கலந்துகொள்ளும் பொருட்டு முதலில் தெஹ்ராடுன் நகருக்கு விஜயம் செய்கிறார். மாநாட்டில் பங்குபற்றி விட்டு நாடு திரும்பும் வழியில் ஜனாதிபதி புதுடில்லி சென்று, இந்தியத் தலைவர்களைச் சந்திக்கவிருக்கிறார்.

பிரதமர் மன்மோகன் சிங், இந்தியக் காங்

(08ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் வசித்துவந்த யாழ்.இளைஞனை காணவில்லை

திருகோணமலை, நவ.22

திருகோணமலையில் அச்சகம் ஒன்றில் பணிபுரிந்த யாழ்.இளைஞர் ஒருவரை நேற்றுக்காலை முதல் காணவில்லை என்று திருகோணமலை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரஸ்தாப அச்சகத்தில் கடந்த நான்கு வருடங்களாகப் பணிபுரிந்து வரும் யாழ்ப்பாணம் தெல்லிப்பழை சித்தியம்புளியடியைச் சேர்ந்த கந்தசாமி லோகீஸ்வரன் என்பவரே காணாமற்போயுள்ளவர்.

அச்சக நிர்வாகத்தினரால் வழங்கப்பட்ட வீட்டில் வசித்துவந்த இவர், நேற்றுக் காலை முதல் காணாமற்போயுள்ளார்.

## மோசமான புற்றுநோயால் அன்ரன் பாலசிங்கம் பாதிப்பு



- லண்டனிலிருந்து ந. வித்தியாதரன் -

லண்டன், நவ. 22

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் மோசமான புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றார். உடலின் முக்கிய அவயவங்கள் எங்கும் புற்றுநோய் பரவியுள்ள நிலையில் இனிக் குணப்படுத்த முடியாத உபாதைக்குள்ளும், பிணிக்குள்ளும் அவர் சிக்கியிருக்கின்றார்.

அறுபத்தெட்டு வயதாகும் அன்ரன் பாலசிங்கம் கடந்த 35 வருடங்களாக நீரிழிவு நோய் காரணமாக அவரது இரு சிறுநீரகங்களும் ஒன்றன் பின் ஒன்றாகச் செயலிழந்து போக, போராளி' ஒருவரிடமிருந்து தானமாகப் பெற்ற ஒரு சிறுநீரகமே இப்போது அவரது வாழ்வுக்குத் தாக்குப் பிடிக்கின்றது.

நீரிழிவு, சிறுநீரகச் சிக்கல், உயர் இரத்த அழுத்தம், இருதய நோய் ஆகியவற்றுடன் தமது அரசியல் பணிகளை - தீவிர வைத்திய சிகிச்சைகளுக்கு மத்தியில் மேற்கொண்டு வந்த அவர் கடந்த எட்டு, ஒன்பது மாதங்களாகக் கடும் நோயால் அவதிப்பட்ட நிலை

(08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழருக்கான எந்தத் தீர்வும் நோர்வேயால் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்

### முன்னாள் இந்தியத் தூதர் சத்வால் கருத்து

ரொறன்டோ, நவ.22

இலங்கையில் எட்டப்படும் எந்தச் சமாதானத் தீர்வும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடன் நோர்வேயால் உறுதிப்படுத்தி, உத்தரவாதப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்று முன்னாள் இந்தியத் தூதுவர் எஸ். ஜே.எஸ். சத்வால் தெரிவித்தார்.

'யதார்த்தபூர்வமான சுயாட்சியே தமிழருக்குத் தேவைப்படுகிறது' என்ற மகுடத்தில் 'ஒட்டாவா சிற்றிஷன்' என்ற பத்திரிகையில் இவர் கட்டுரை ஒன்று எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரையிலேயே எத்தகைய தீர்வும் நோர்வேயால் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்.

வடக்கு - கிழக்கில் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் இலங்கையில் இந்தியத் தூதுவராக இருந்து பணியாற்றி இருக்கிறார். பின்னர் கனடாவிலும் இந்தியத் தூதுவராக இருந்திருக்கிறார்.

கட்டுரையில் அவர் தெரிவித்திருக்கும் முக்கிய கருத்துகள் சில வருமாறு:-

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 பாதையைத் திறந்து வடக்குக்கு பொருள்களை விரைந்து அனுப்புங்கள்!

### ஐ.தே.கவின் பொதுச் செயலர் அரசிடம் வலியுறுத்து

கொழும்பு, நவ.22

''வடக்கிலுள்ள தமிழர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் அல்லர். அங்குள்ள மக்களின் தற்போதைய கஷ்ட நிலையறிந்து 'ஏ-9' பாதை ஊடாக அத்தியாவசிய உணவுப் பொருள்களை உடனடியாக அனுப்பி வைப்பது அரசின் கடமை.''

ஐ.தே.கட்சியின் புதிய பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் எதிர்க்கட்சித்

(08ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் உட்பட 5 மாவட்டங்களில் சிக்குன் குனியா நோய் பரவுகிறது

யாழ்ப்பாணம், நவ.22

மன்னார், மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை மற்றும் கொழும்பு மாவட்டங்களில் பரவி வரும் வைரஸ் காய்ச்சல் ''சிக்குன் குனியா'' என்று கண்டறியப்பட்டிருக்கிறது; ஊர்ஜிதமாகியுள்ளது.

### மருத்துவ ஆய்வுகள் மூலம் ஊர்ஜிதம்

மேற்படி மாவட்டங்களில் பெரும் எண்ணிக்கையான மக்களை பீடித்த காய்ச்சல் ''சிக்குன் குனியா'' என்று வைத்திய வட்டாரங்களால் சந்தேகிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்களின் மாதிரிகள், தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவினரால் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டிருந்தன.

நாகம பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் மொலகியுலர் மெடிக்கல் ஆய்வு கூடம், ஜென்ற் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையம், அரசாங்க வைத்திய ஆராய்ச்சி நிலையம் ஆகிய மூன்று இடங்களிலும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வாகரையிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்ற உணவை ஆயுதமாகப் பயன்படுத்துகிறது அரசு

### சபையில் சம்பந்தன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 22

அரசு மனித உரிமைகள் சட்டங்களையும் மீறி வாகரை, கதிரவெளி மக்களை அவர்களது பாரம்பரியப் பிரதேசங்களிலிருந்து வெளியேற்ற உணவுப் பொருள்களை யுத்த ஆயுதங்களாகப் பாவிக்கின்றது என கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. நேற்று சபையில் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று மாலை, வாகரைக்கு உணவுப் பொருள்கள் அனுப்பப்படுவது தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையைச் சமர்ப்பித்து அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

வாகரை, கதிரவெளிப் பிரதேசங்களில்

(08ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் கிளைமோர் வெடிப்பு

உடுப்பிட்டி, நவ. 22

பருத்தித்துறை நீதிமன்றத்துக்கு சமீபமாக நேற்று நண்பல் கிளைமோர் குண்டு ஒன்று வெடித்தது.

இதனால் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(1-166-115)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சனிக்கிழமையிலும் இலவச போக்குவரத்து பள்ளி மாணவர்களுக்கு விசேட சலுகை

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ். மாவட்டத்தில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் மாணவர்களின் நலன் கருதி உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் சனிக்கிழமைகளிலும் அரச பேருந்துகளில் இலவசமாகப் போக்குவரத்தில் ஈடு படக் கூடிய வாய்ப்பினை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்படுத்திக் கொடுத் துள்ளார் என அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்திக்குறிப்பில்:

இதுவரையில் பாடசாலை நாள்களில் மாத்திரமே அரச பேருந்துகளில் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாகப் பிரயாணம் செய்யக்கூடிய வாய்ப்புகள் இருந்து வந்துள்ளன. எனினும் யாழ். மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பல்வேறு நிலைமைகள் காரணமாக இம்மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இருந்து வருவதால் இம்மாணவர்களுக்கென விசேட சலுகை என்ற அடிப்படையில் இந்த வசதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் போக்குவரத்து அமைச்சருடன் கலந்துரையாடியதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும் - என்றுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி



அருட் தந்தை

**J.A. கருணாகரர்**

**இறைவனடி சேர்ந்த செய்திகேட்டு துயர் மிக அடைகிறோம்.**

**இவர் எமது கல்லூரிக்காக அயராது உழைத்த அதிபராவார்.**

**அவரின் ஆன்ம சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.**

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ திரு இருதயக்கல்லூரி, கரவெட்டி.
(சி-50438)

## கண்ணீர் அஞ்சலி



அமரர் **நடராஜா ரவிராஜ்**
(நா.உ. யாழ். மாவட்டம்)

தென்மராட்சி பெற்றெடுத்த தலைவனுக்கு!
எங்கள் கண்ணீரும் செந்நீரும் காணிக்கை
பண்டாரவன்னியன் தேசத்தில் வாழ்கின்றோம்.
சங்கிலியன் ஆண்ட மண்ணில் கால் பதிக்க
எங்களுக்கு வழியில்லையே
வருவோம் ஒரு நாள் உங்களைத் தரிசிக்க

கானகன் முன்பள்ளி
மாணவர்கள், பழைய மாணவர்கள்,
ஆசிரியர், பெற்றோர்கள்.
உருத்திரபுரீஸ்வரம்.
(55431)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா பொன்னம்மா
(சங்கானை)



மீசாலை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், அராலி வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா பொன்னம்மா நேற்று (21.11.2006) செவ்வாய்க் கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும், மனோவதனராஜா (ப.நோ. கூ. சங்கம்), சுப்பிரமணியம் (ராம்லி பல்பொருள் வாணிபம், சங்கானை), பிரேமாவதி, பத்மாவதி, ஸ்கந்தராசா (பொறுப்பதிகாரி, வலி - மேற்கு பிரதேச சபை உப அலுவலகம், வட்டுக்கோட்டை), சாந்தினிதேவி (ஆசிரியை, சங்கானை சிவப்பிரகாச ம.வி.) ஆகியோரின் அன்புத் தாயும் சந்திரவதனி, ஸ்ரீசாந்தினி, பரராசசிங்கம் (திருமகள் தொலைத்தொடர்பு நிலையம், சங்கானை), யோகேஸ்வரன் (லீலா வெதுப்பகம், சங்கானை), புஸ்பமலர், ஜீவதரன் (SJB - Trade Agents - Manipay) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற கார்த்திகேசு பொன்னம்மா மற்றும் கணபதிப்பிள்ளை நல்லையா (ஓய்வுபெற்ற அதிபர் ஸ்ரீ கணேச வித்தியாசாலை, சித்தன்கேணி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் கந்தசாமி (ப.நோ.கூ. சங்கம் - சாவகச்சேரி), கந்தசாமி சின்னம்மா (இருபாலை) ஆகியோரின் சகோதரியும் பிரஷாந்தினி, விசாகிசன், பிரதாபினி, பிரசாந்தன், அச்சுதன், அஸ்வினி, யதுசாயினி, தனுசாயினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (22.11.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வீதி,
சங்கானை.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(சி-50443)

### திருமதி சதாசிவம் செல்லாச்சிப்பிள்ளை

சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியை வதிவிடமாகக் கொண்ட திருமதி சதாசிவம் செல்லாச்சிப்பிள்ளை நேற்று (21.11.2006) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சதாசிவத்தின் பாசமிகு மனைவியும் சிவசுப்பிரமணியம் (டென்மார்க்), பாலசுப்பிரமணியம் (டென்மார்க்), அமிர்தநாயகி, லோகநாதன் (சுவிஸ்), ஸ்ரீ பத்மநாதன் (டென்மார்க்), லோகநாயகி (காந்தி), தவமலர் (குஞ்சு) ஆகியோரின் அன்புத் தாயும் இராமநாதன் (யோகர்), சகுந்தலாதேவி, அமரர் கமலலோஜினி, பரமேஸ்வரி, தயாளினி, இராஜநாதன், கோபாலகிருஸ்ணன் ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2006) புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. இராமநாதன்
(யோகர்).

## கடத்தப்பட்ட குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், நவ. 22

கோண்டாவில் மேற்கில் நேற்று முன்தினம் மாலை இனந் தெரியாதவர்களால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கோண்டாவில் ஸ்ரேசன் வீதியைச் சேர்ந்தவரான சண்முகராஜ் சசிகரன் (வயது - 34) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவில் பிரஸ்தாப நபர் கடத்திச் செல்லப்பட்டிருந்தார் என்றும் -

நேற்றுமுன்தினம் ஊரடங்கு நேரத்தில் வானில் வந்தவர்கள் அவரை வீட்டுவாசலில் இறக்கியபின் சுட்டனர் என்றும் -

விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். நீதிவான் இ.த. விக்னராஜா சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

(1-202-62)

## பதிவுகளை மேற்கொள்ள அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.22

பலாலி ஆசிரிய கலாசாலைக்கு 2006-2007 கல்வி ஆண்டிற்கான ஆங்கில நெறிக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரிய மாணவர்களை நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பதிவுகளை மேற்கொள்வதற்கான ஆவணங்களுடன் சமூகமளிக்குமாறு கலாசாலை அதிபர் த.காங்கேசபிள்ளை தெரிவித்துள்ளார்.

(1-203)

## தகவல் தொழில்நுட்ப கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ.22

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப உயர் தேசிய டிப்ளோமா (எச்.என்.டி.ஐ.ரி) கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

முதல் தடவையாக நிறுவனத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி கடந்த திங்கட்கிழமை என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது குடாநாட்டில் நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சற்றுத் தாமதமாக வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும் என்று நிறுவனத்தின் உதவிப்பதிவாளர் தெரிவித்துள்ளார். (202)

## குடாநாட்டில் காகிதாதிகளுக்கு தட்டுப்பாடு

தென்மராட்சி, நவ.22

அலுவலகங்களில் கணனிப்பதிப்புக்குப் பயன்படுத்தும் காகிதாதிகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இத்தட்டுப்பாட்டால் அலுவலகங்களில் கணனிப்பதிப்பு மற்றும் புகைப்படப்பிரதி ஆகியவை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-இவ்வாறான காகிதாதிகளின் விலை திடீரென அதிகரித்ததால் புகைப்படப்பிரதி செய்யும் கட்டணமும் தனியார் கடைகளில் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(202)

### தவறிவிட்டது

**திருகோணமலையில் இருந்து கப்பல் மூலம் 21.11.2006 அன்று யாழ்ப்பாணம் வந்தடைந்த எமது பெறுமதி வாய்ந்த Roshan என்று பெயர் குறிப் பிடப்பட்ட கறுப்புநிற பயணப்பொதி ஒன்று தவறி விட்டது. எனவே அதனைக் கண்டெடுத்தவர் கள் கீழ்க் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கங் களுடன் தொடர்புகொள்ளவும். உரிய சன்மானம் வழங்கப்படும். தொ.இல.: 021 222 2021, 8190.**

## கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபை நியமனமும் மகாசபைக்கான உறுப்பினர்களைச் சேர்த்தலும்

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய முகாமைத்துவம் தொடர்பாக யாழ். மாவட்ட நீதிமன்றில் நம்பிக்கைச் சொத்து 02 வழக்கின் 21.07.2006ஆம் திகதிய தீர்ப்புக்கு அமைய நீதிமன்றினால் பதினைந்து பேர் கொண்ட முதலாவது தர்மகர்த்தா சபை நியமிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தலைவர் : | திரு. கா. பாலசுப்பிரமணியம் |
| உபதலைவர்கள் : | திரு. இ. நடராசா |
| | திரு. மு. சிவஞானசுந்தரம் |
| செயலாளர் : | திரு. இ. இராசலிங்கம் |
| உபசெயலாளர்கள் : | திரு. அ. ஜெயேந்திரன் |
| | திரு. கா. சுதாகரன் |
| பொருளாளர் : | திரு. இ. இராசசேகரம் |

நிர்வாக சபை உறுப்பினர்கள்:

திரு. ச. இ. இராசசேகரம்
திரு. சி. தேவசுந்தரலிங்கம்
திரு. பு. ஜீவானந்தன்
திருமதி ச. குலசிங்கம்
திரு. சு. விக்னேஸ்வரன்
திரு. இ. சண்முகநாதன்
திரு. செ. இராசேந்திரம்
திரு. பூ. தர்மகுலசிங்கம்

கணக்குப் பரிசோதகர்கள் : திரு. சு. தேவராசா
திரு. சு. வரதராசேஸ்வரமுதலி

இத்தர்மகர்த்தா சபை தீர்வைத் திகதியான 21.07.2006இல் இருந்து மூன்று ஆண்டுகள் செயற்படும். தொடர்ந்து வரும் தர்மகர்த்தா சபைக்கு பதினைந்து பேரைத் தெரிவு செய்வதற்கு ஏதுவாக மகாசபை உறுப்புரிமைப் பட்டியலை ஆறுமாத காலத்துக்குள் தீர்ப்பிற்கு அமைய பின்வரும் பகுதியினரைக் கொண்டு தயாரிக்கவேண்டியுள்ளது.

அ. சின்னத்தம்பி காசிநாதர் பரம்பரையினர் - மூவர்
ஆ. ஆலயத்துக்கு கட்டடங்கள் திருப்பணி, தேர், காணி முதலியவற்றை வழங்கியோர் - மூவர்
இ. வருடாந்த மகோற்சவ உபயம் செய்வோர் - மூவர்
ஈ. வருடாந்த மகோற்சவம் தவிர்ந்த ஏனைய உபயங்கள் வருடம் தோறும் செய்வோர் - மூவர்
உ. ஏனைய மகாசபை உறுப்பினர்கள் - மூவர்

மகாசபை உறுப்பினராக சேர விரும்புவோர் ஆலயப் பணிமனையில் ரூபா. 20/- செலுத்தி உறுப்புரிமைப் படிவத்தை பெற்றுப் பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தை சந்தாப்பணத்துடன் 20.12.2006ஆம் திகதிக்கு முன்னதாக செயலாளர், மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபை கொக்குவில் என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக தபால் மூலமோ நேரடியாகவோ அனுப்பி வைக்கவும். (ஆண்டு சந்தா ரூபா. 100, ஆயுட்சந்தா ரூபா 1000).

ந.சொ. 02 வழக்கின் தீர்ப்பு பிரதியை ஆலயப் பணிமனையில் ஆலயம் திறந்திருக்கும் நேரத்தில் பார்வையிடலாம்.

ஆலயத்தொண்டில்

கா. பாலசுப்பிரமணியம்,
தலைவர்.

இ. இராசலிங்கம்,
செயலாளர்.

(சி-50440)

## மரண அறிவித்தல்கள்

### பேதுறு பிலிப்ஸ் (J.P.)

வைத்தியகலாநிதி பேதுறு பிலிப்ஸ் (J.P.) 20.11.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (21.11.2006) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு மட்டுவில் லூர்த்து அன்னை தேவாலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு.

தகவல்:
புஸ்பராணி (மகள்).
(55439)

### திருமதி சுகந்தினி கிருபானந்தன்



இல. 474/4, காலி வீதி, கொள்ளுப்பிட்டியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சுகந்தினி கிருபானந்தன் 19.11.2006 ஞாயிற்றுக்கிழமை அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் இராஜலிங்கம் (Soma Trading Co, Wolfendol Street, Col - 13), மாணிக்கம் மாயாவதி தம்பதியரின் ஏக புதல்வியும், கொக்குவில் கிழக்கு திரு. திருமதி சண்முகரட்ணம் தம்பதியரின் அன்பு மருமகளும் கிருபானந்தனின் (பணிப்பாளர், Seagull Property Developers Pvt. Ltd.) அன்பு மனைவியும் அஷ்வின், ஆகாஷ், அஷானி ஆகியோரின் பாசமிகு தாயும், சுதர்ஷன் (Maya Trading Co,Wolfendol Street, Col - 13), சுபாஷன் (கனடா), விமலன் (U.S.A) ஆகியோரின் ஆசைச் சகோதரியும், பிரஜந்தா, தருமினி (கனடா), பிரபாகரன் (U.K), வாசுகி ஜெயந்திரன், கருணாகரன் (U.K) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு, நல்லடக்கத்துக்காக நாளை (23.11.2006) வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சண்முகரட்ணம் கிருபானந்தன் (கணவர்),
சுப்பிரமணியம் இராஜலிங்கம் (தந்தை).
தொ.பே. : 0779067947, 2577409.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட தமிழ்பேசும் மக்களிடையே வாக்கெடுப்பு

## சர்வதேச சமூகத்திடம் கோரப்போவதாக மாவை எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு,நவ.22

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட தமிழ்பேசும் மக்களிடையே வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டுமென்று சர்வதேச சமூகத்தைக் கோரவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. மாவை சேனாதிராஜா நேற்று நாடாளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

தமிழருக்கான சுதந்திரத்தை வழங்குவதன்மூலமே ஐக்கிய இலங்கைக்குள் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காண முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான நான்காவது நாள் விவாதத்தில் மாவை சேனாதிராஜா தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

தமிழர் பிரச்சினைகள் குறித்து கடந்த 50 ஆண்டு காலமாக அரசுகள் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் எதுவும் முறையாக நடைமுறைப் படுத்தப்பட்டதில்லை.

தமிழர் தாயகத்தில் சிங்கள அரசு இராணுவத்தைக் குவித்து இன அழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இருந்தும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் இன்னும் அமுலில் இருக்கின்றது.

வெளிவிவகார அமைச்சர் இங்கு பேசும்போது படையினர் தற்காப்பு நடவடிக்கையையே மேற்கொண்டுவருவதாகக் கூறினார். செஞ்சோலை மீதான குண்டுவீச்சு, கிளிநொச்சி வைத்தியசாலை அருகே நடத்திய குண்டு வீச்சு, மூதூரில் 17 தொண்டர் நிறுவன ஊழியர்கள் படையினரால் கொல்லப்பட்டது இவை அனைத்தும் தற்காப்பு நடவடிக்கைகளா?

சமீபத்தில் வவுனியாவில் கிளைமோர் குண்டுவெடித்ததையடுத்து படையினர் அருகிலிருந்த விவசாய பல்கலைக் கழகத்துக்குச் சென்று ஐந்து தமிழ் மாணவர்களை மிருகத்தனமாக சுட்டுக்கொன்றதும் தற்காப்பு நடவடிக்கையா?

வன்னிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் நிலத் தொடர்பு இருக்குமானால் யாழ்ப்பாணத்தில் உணவுத் தட்டுப்பாடு இருக்காது. தமிழர் தாயகத்தில் இராணுவத்தை குவித்து தமிழ் மக்களை பட்டினிபோட்டு இராணுவ வெற்றிகளை குவிக்கப்பார்க்கின்றீர்கள். வாகரை, கதிரவெளி பகுதி மக்களைப் பட்டினிபோட்டு அவர்களை அப்பகுதிகளிலிருந்து வெளியேற்றிவிட்டு அப்பகுதியை கைப்பற்ற முனைகின்றீர்கள். யாழ். மக்களை பட்டினி போட்டு கேடயமாகப் பயன்படுத்த முயற்சிக்கின்றீர்கள்.

வெளிநாடுகளிலிருந்து தமிழ் மக்கள் பெருமளவு பணத்தை இங்கு அனுப்புகின்றனர். வங்கிக் கணக்குகளைப் பார்த்தால் இது புரியும். அதேபோல் மலையகத் தமிழ்மக்கள் உழைப்பின் காரணமாக வெளிநாட்டு செலாவணி கிடைக்கின்றது. தமிழ் மக்களும் வரி செலுத்துகின்றனர். இந்த நிதிகளைக் கொண்டுதான் நீங்கள் யுத்தம் நடத்துகின்றீர்கள்.

வடக்கு - கிழக்கில் மீன்பிடித்தடை அமுலில் இருக்கின்றது. இதன் காரணமாக அப்பகுதி மீனவர்கள் பொருளாதார ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் கடந்த மூன்று மாத காலமாக உழைப்பு இன்றி ஒரு ரூபாவுக்கு பொருள்களைக் கொள்வனவு செய்ய பொருளாதார வசதியின்றி அவல வாழ்க்கை நடத்துகின்றனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடந்த 20 வருட காலத்தில் போஷாக்கற்ற குழந்தைகள் இருக்கின்றனர். இதைப்போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

இன்று வடக்கு - கிழக்கு பிரிக்கப்பட்டுள்ளது. இதை மீண்டும் இணைக்க ஒரு பிரேரணையை முன்வையுங்கள். ஆதரிக்கின்றோம் என ஐ.தே.கட்சி கூறுகிறது. நாங்களும் ஆதரிக்கின்றோம். இருந்தும் அரசு எதுவும் செய்யவில்லை.

(ஐ)



நாடாளுமன்றத்திலிருந்து...

# ரவிராஜைக் கொன்றது அரசா? ஆதாரத்தை கேட்கிறார் மங்கள!



கொழும்பு, நவ.22

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. நடராஜா ரவிராஜைக் கொன்றது அரசுதான் என்பதற்கான ஆதாரத்தை எம்மிடம் சமர்ப்பியுங்கள். அதற்கான தண்டனையை அரசிற்குப் பெற்றுக் கொடுக்க நாம் தயங்கமாட்டோம்."

- இவ்வாறு அமைச்சர் மங்கள சமரவீர நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்று கையில்,

"ரவிராஜைக் கொலை செய்தது அரசுதான் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உட்பட பலர் குற்றஞ்சாட்டுகின்றனர். ஆனால், அரசுதான் இவரைக் கொலை செய்தது என்பதற்கான ஆதாரத்தை முன் வைக்க எவரும் தயாரில்லை.

"அப்படி ஆதாரம் ஏதும் இருந்தால் அதை அரசிற்குச் சமர்ப்பியுங்கள். உரிய நடவடிக்கை நிச்சயம் மேற்கொள்ளப்படும். ஆதாரத்தைப் பொலிஸாரிடம் சமர்ப்பிக்க முடியாது விட்டால் வேறு மார்க்க மூலமாவது அரசிடம் சமர்ப்பியுங்கள்.

"ரவிராஜின் கொலை தொடர்பாகப் பரந்தளவில் விசாரணை நடத்த அரசு தயாராகவுள்ளது. 'ஸ்கொட்லண்ட் யார்ட்' பொலிஸாரை விசாரணை நடத்த நாம் அழைத்துள்ளோம். அவர்கள் வந்தால் விசாரணை உடனடியாகத் தொடங்கப்படும்.

"எவர் கொலை செய்யப்பட்டாலும் அக் கொலையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். எல்லோருடைய உயிர்களையும் நாம் சமமாக மதிக்கிறோம். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற மஹிந்த ராஜபக்ஷ இடமளிக்க மாட்டார்.

அரசு எல்லாக் கொலைகள் தொடர்பாகவும் விசாரணைகளை நடத்திக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால், இன்னும் கொலையாளிகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. லக்ஷ்மன் கதிர்காமர், ஆர்.பிரேமதாஸ, காமினி திஸ்ஸநாயக்க ஆகியோரைக் கொலை செய்தவர்களை இன்னும் கண்டுபிடிக்க முடியாமல் உள்ளோம்.

"எல்லாவற்றிற்கும் மேலாகப் புலிகள் வன்முறைகளைக் கைவிட்டு விட்டு பேச்சு மேசைக்குத் திரும்ப வேண்டும். அப்போது தான் இந்த மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த முடியும்." - என்றார்.

(ஐ)

# கட்சியைவிட்டு ஒருபோதும் பிரிந்து செல்லமாட்டோம் என்கிறார் கரு

## ஐ.தே.க. அதிருப்திக் குழுவினர் நேற்று விளக்கம்

கொழும்பு, நவ. 22

நாம் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து கொண்டே அதன் குறை நிறைகளைக் கலந்துரையாடி ஒரு சரியான தீர்மானத்திற்கு வருவோம். நாம் ஒருபோதும் கட்சியிலிருந்து பிரிந்து செல்லமாட்டோம்.

ஐ.தே.கட்சியின் அதிருப்தியாளர் குழுவிற்குத் தலைமை வகிக்கும் கட்சியின் மூத்த உறுப்பினர் கரு ஜயசூரிய இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் உள்ள நிப்போன் ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்தே இதனை இவர் தெரிவித்தார்.

அதிருப்தியாளர்களின் நிலைப்பாடு பற்றி விளக்கமளிக்கையில் அவர் கூறியதாவது:-

ஐ. தே. கவில் தற்போது சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனாலும் நாம் பிரிந்து போகப் போவதில்லை. கட்சியில் இருந்துகொண்டே எமது யோசனைகளை நிறைவேற்றிக் கொள்வோம். எந்தக் காலத்திலும் எமது கட்சி பிரிந்து செல்லாது எனவும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் எஸ். பி. திஸநாயக்க, ஜீ. எல்.பீரிஸ், மிலிந்த மொரகொட, பந்துல குணவர்தன, நவின் திஸ்ஸநாயக்க, குமார நாணயகார, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், ரஞ்சித் பத்திய பண்டார, ரெஜினோல்ட்பெரேரா, லக்ஷ்மன்யாப்பா அபேவர்தன, விஜயபால மெண்டிஸ், மனோகரி ஜயரட்ன, வி. தயாரட்ன, வர்னதாச பண்டார, காமினி லொக்குகே, ராஜித சேனாரட்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டில் எஸ். பி. திஸ்ஸநாயக்க உரையாற்றுகையில் கூறியதாவது:-

நாம் கட்சியில் தற்போது நிலவியுள்ள குறைபாடுகளைக் கலந்துரையாடி ஒரு சரியான தீர்மானத்திற்கு வருவோம். அப்படியாக நாங்கள் ஒன்றுபட்டு செயற்படும் வேளையில் நாட்டின் பொருளாதாரத்திற்கும் சமாதானத்திற்குமான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல அரசுக்கு உறுதுணையாக இருப்போம் - என்று தெரிவித்தார்.

(ஐ)

# குடாநாட்டை துண்டித்து இந்தியாவிடம் ஒப்படைக்க முயற்சிக்கின்றது அரசு

## நாடாளுமன்றத்தில் ஐ.தே.கட்சி எம்.பி. குற்றச்சாட்டு



வடக்கை தனியாகப் பிரித்து இந்தியாவிடம் ஒப்படைக்க அரசு முயற்சிக்கின்றது என ஐ.தே.கட்சி எம்.பி லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்கு பண்டார தலைமையில் கூடியது. வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் நான்காவது நாள் விவாதத்தில் அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

ஏ - 9 வீதியை மூடியதன் மூலம் யாழ். குடாநாட்டை தெற்கிற்கு தொடர்பில்லாத தனி மாவட்டமாக மாற்றிவிட்டீர்கள். அன்று 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கை மூலம் ஏ - 9 வீதியை திறக்க முயற்சித்தீர்கள். இதற்காக ஐயாயிரம் இராணுவ வீரர்களைப் பலி கொடுத்தீர்கள் இன்று ஏ - 9 வீதியை மூடி வைத்திருக்கின்றீர்கள். ஏன் இந்த இரட்டை வேடம். ஒவ்வொரு காலத்துக்கு ஒவ்வொரு கொள்கையை கடைப்பிடிப்பதால் தான் நாட்டில் குழப்பம் ஏற்படுகின்றது.

விலைவாசி அதிகரித்தால் பரவாயில்லை. நாட்டின் பாதுகாப்புதான் முக்கியம் என்று மக்கள் தன்னிடம் தெரிவித்ததாக வரவு - செலவுத் திட்டத்தை இச்சபையில் சமர்ப்பித்துப் பேசிய ஜனாதிபதி தெரிவித்தார். இன்று நாட்டில் பாதுகாப்பு இருக்கின்றதா? பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் நடக்கிறது. எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என அச்சத்துடன் மக்கள் வாழ்க்கை நடத்துகின்றனர்.

இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை இந்த நாடாளுமன்றத்துக்கு முன் வைத்தால் ஐ.தே. கட்சி அதை ஆதரிக்கும். இந்த நாட்டிலுள்ள பிரச்சினைகளை அரசு வேடிக்கையாக நினைக்கின்றது.

ரவிராஜ் கொலைக்கு அரசே காரணம் என நேற்று இச் சபையில் பேசிய மகேஸ்வரன் குற்றஞ் சாட்டியுள்ளார். ரவிராஜ் கொலை குறித்து விசாரணை நடத்த ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸாரை அழைப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார். எங்கே ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸார்?

அமைச்சர் மங்கள சமரவீர:-

ஸ்கொட்லண்ட் யார்ட் குழு இன்னும் ஒரு சில தினங்களில் இலங்கை வருகின்றது.

லக்ஷ்மன் கிரியெல்ல:-

ரவிராஜ் கொலை செய்யப்பட்டு எவ்வளவு நாளாகின்றது? கொலைக்கான தடயங்களை மறைத்துவிட்டு ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸாரை வரவழைத்து என்ன பயன்? (ஐ)

# 'சிக்கின் குனியா'வைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் மாற்றமென அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.22

குடாநாட்டில் சிக்கின் குனியா எனச் சந்தேகிக்கப்படும் வைரஸ் காய்ச்சலை கட்டுப்படுத்தும் நோக்குடன் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இன்று ஆரம்பமாகவிருந்தன. இந்தச் செயற்பாடுகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மாகாண சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இன்று முதல் மூன்று தினங்கள் இடம்பெறும் என. முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இச் செயற்பாடுகள் பிற்போடப்பட்டுள்ளமை தொடர்பாக சுகாதாரப் பணிப்பாளர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தில் சிக்கின் குனியா என சந்தேகிக்கப்படும் வைரஸ் காய்ச்சலை கட்டுப்படுத்தும் நோக்குடன் இன்று முதல் மூன்று தினங்கள் பாடசாலை மாணவர்களை ஒவ்வொரு பாடசாலையையும் சூழவுள்ள பகுதிகளில் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டிருந்தது. தற்போதைய பாதுகாப்பு சூழ்நிலையையும் சீரற்ற காலநிலையையும் கருத்திற்கொண்டு இத் திட்டத்தில் மாற்றம் செய்யும்படி பல்வேறு தரப்பினரிடமிருந்து கோரப்பட்டுள்ளது. இன்றைய மாவட்ட சூழ்நிலையை கருத்திற்கொண்டு இத் திட்டம் மாற்றியமைக்கப்படுகிறது.

சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பாடசாலைகளுக்கு சென்று சிக்கின் குனியா தடுப்பு நடவடிக்கை பற்றி விளக்கம் அளிப்பார்கள். ஒவ்வொரு மாணவனும் தமது வீட்டிலும், உற்றார், உறவினர், நண்பர்கள் வீட்டிலும் இது சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் தடுப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுமாறு வேண்டுகிறோம்.

வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்களை [illegible] பின்பற்றுமாறு பணிவுடன் வேண்டுகிறோம் - என்றுள்ளது. (1)

# யாழ்.பிரதேச செயலக பிரிவில் மாதாந்த உதவிக் கொடுப்பனவு

யாழ்.பிரதேச செயலகத்தால் தபாலகங்கள் மூலம் வழங்கப்படும் பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவுகளில் டிசெம்பர் மாதத்துக்கு உரிய கொடுப்பனவு எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து வழங்கப்படவிருக்கின்றது என யாழ்.பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இந்தக் கொடுப்பனவு அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

**ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்**

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Micro media Flash MX
Course Fee :2000/=

**ஒரே நாளில் ஆரம்பம்:- 28/11/2006 - 08.30**

ஏனைய அனைத்து கணனிக்கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் 24/11/2006, 25/11/2006, 26/11/2006, 29/11/2006 ஆகிய திகதிகளில் ஆரம்பமாகிறது.

மாணவர்கள் விண்ணப்ப படிவங்களை யாழ் பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்று பூர்த்திசெய்துகொண்டு வரவும். நேரடியாக அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 | 22 |
| - | - |
| 03 | 11 |
| - | - |
| 1919 | 2005 |

**திருமதி அனி சில்வெஸ்ரர்**

ஆண்டொன்று சென்றது அம்மா!
ஆண்டவன் உம்மை அழைத்து
பல்லாண்டு சென்றாலும் தாயே!
பதிந்திடுவோம் உம் நினைவை என்றும்

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.
(55453)

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 | 22 |
| ★ | ★ |
| 12 | 11 |
| ★ | ★ |
| 1929 | 1998 |

**அமரர் கந்தையா அமிர்தலிங்கம்**
(ஓய்வு பெற்ற ஊழியர், யாழ்.போதனா வைத்தியசாலை)

உதிர்ந்து விட்ட பூவாக
மண்ணில் மறைந்துவிட்ட போதிலும்
நெஞ்சில் எழுதிவைத்த உன்
நினைவுகள் உயிரோடு வாழும்

கிருசாந்தன் பேக்கரி,
49, புதுவீதி, கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

மகன் குடும்பத்தினர்,
அ.புஸ்பகுமார்.
(55330)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 | 02 |
| ★ | ★ |
| 09 | 12 |
| ★ | ★ |
| 1931 | 2005 |

**அமரர் ஐயாத்துரை பூபாலசிங்கம்**
திதி:- அபரபக்க சஷ்டி (22.11.2006)

அன்போடும் பண்போடும் பாசத்தோடும்
எமை அரவணைத்து காத்த தெய்வமே
நீங்கள் மறைந்து ஓராண்டு என்ன
ஆயிரம் ஆண்டு சென்றாலும்
உங்களை நாம் என்றும் மறவோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகிறோம்.

இல.11, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(55337)

# காரைநகர் மாணவர்களுக்கு வேர்ள்ட் விஷன் உதவி

காரைநகர்,நவ.22

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் உலக தரிசனம் நிறுவனம் வறிய பாடசாலை மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளது.

கடந்தவாரம் காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனையில் உதவி அரச அதிபர் ஆ.ரி.ஜெயசீலன் தலைமையில் தெரிவுசெய்யப்பட்ட 100 மாணவர்களுக்கு தலா ஆயிரத்து 250 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (202-73)

# முகாமைத்துவ அலுவலர்கள் நியமிக்கப்படுவர்

யாழ்ப்பாணம், நவ.22

வடக்கு - கிழக்கில் உள்ள குறிப்பிட்ட சில பிரதேச சபைகளுக்கு அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் வகுப்பு I ஐச் சேர்ந்த முகாமைத்துவ அலுவலர்கள் செயலாளர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் இ.இளங்கோவன் இதற்கான விவரங்களைத் திரட்டியுள்ளார்.

அரச முகாமைத்துவ வகுப்பு I இற்கு நியமனம் பெற்ற திகதி மற்றும் செயலாளராகக் கடமையாற்ற விருப்பம் தெரிவித்த பிரதேச சபைகளின் ஒழுங்கின் பிரகாரமே தகுதியானவர்கள் நியமிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச முகாமைத்துவ வகுப்பு I இற்குள் உள்வாங்கப்பட்ட கணக்குப்பதியுநர், சிறாப்பர், தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர், எழுதுநர்கள் என பலரும் இச் சேவைக்கு விண்ணப்பித்துள்ளதாகத் தெரியவருகிறது. (202-95)

# கோட்டையின் சுற்றுப்புறம் துப்புரவாக்கப்படுகின்றது

யாழ்ப்பாணம், நவ.22

யாழ். கோட்டையின் தென்மேற்கு பகுதியில் உள்ள மரங்கள், பற்றைகள் கனரக வாகனங்களின் உதவியுடன் அழித்து துப்புரவு செய்யப்படுகின்றது.

படையினரின் பாதுகாப்புடன் மேற்படி கோட்டை சுற்றுப்புறப் பற்றைகள் முழுவதும் அழிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. (202-9[illegible])


**இறைச்சிக்கோழி**
கல்பேட் விற்பனைக்குண்டு.
தொடர்பு: New R.S.K. Farm,
மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.
(55338)



**மணமகள் தேவை**
அரச ஊதியம் பெறும் யாழ். நகரில் சொந்த வீடு உள்ள ஆணிற்கு நற்குணமுள்ள வன்செயலால் தலைவனை இழந்த அல்லது வலது குறைந்த (தனது வேலையை தான் செய்யக்கூடியவர்) அல்லது வேறு யாராகிலும் நடுத்தர வயதுடைய மணமகள் தேவை. தொடர்பு விளம்பர இல. 2933, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.
(55465)


## 15ஆம் நாள் நினைவு அஞ்சலி

எமது சக ஆசிரியை திருமதி யுஸ்ரின் அன்ரனிப்பிள்ளை அவர்களின் அன்புத் தந்தை

**அகஸ்ரின் சிங்கராயர்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்,
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
(55450)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர் ச.கமலநாதன் அவர்களின் தாய்

**சண்முகநாதன் தையல்நாயகி**

அவர்களின் மறைவு குறித்து கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக்
கூட்டுறவுச்சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
(55450)

யாழ்ப்பாண ஆங்கிலப் பேச்சு மற்றும் நாடக கல்வி நிலையம் வகுப்புகள் நவம்பர் 11ஆம் திகதி ஆரம்பமாகிவிட்டன. மாணவ, மாணவிகள் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் திருமதி எஸ்.கதிர்காமரைச் சந்தித்து தமது பரீட்சை பற்றிய குறிப்புகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

இயக்குநர்,
31, சுவாட்ஸ் லேன், சுண்டிக்குளி.

**UNIVERSITY OF JAFFNA**
**TENDER NOTICE**

This refers to the above advertisment published in the Uthayan of 05.11.2006 inviting for consultancy service for the following.

1. Consultancy Service for the construction of Buildings and Structures and Services for the faculty of Applied Science of the Vavuniya Campus at pampaimadu.
2. Consultancy Service for the Construction of Buildings and Structures and Services for the Faculty of Business Studies of the Vavuniya Campus at Pampaimadu.

The bid documents may be obtained until 30.11.2006 and will be accepted till 1.30 p.m. on 07.12.2006.

The other contents of this advertisement remain unchanged.

P.O.Boz 57,
Thirunelvely,
Jaffna.

Registrar.

## நீங்கா நினைவுகளுடன் மூன்றாண்டுகள்



| மண்ணுலக வாழ்வுக்காய் | விண்ணுலக வாழ்வுக்காய் |
|---|---|
| 25 | 22 |
| - | - |
| 09 | 11 |
| - | - |
| 1944 | 2003 |

**வல்லிபுரம் ஜோன் தேவபாலச்சந்திரன்**
(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - தேசிய சேமிப்பு வங்கி)

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
மரித்தாலும் வாழ்வான்"

இல.135, கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.
(55459)

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

*திருமதி இரத்தினம்மா பொன்னுத்துரை*



தாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.இரத்தினம்மா பொன்னுத்துரை 19.11.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான தம்பிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும்; சண்முகம்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் அமரர் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நடராசா(வவா), விஜயலெட்சுமி, ஜெயலெட்சுமி, விக்னராசா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயும், வை.அம்பலவாணர்(முன்னாள் பொது முகாமையாளர், துணுக்காய் ப.நோ.கூ.சங்கம்), புலவர் செ.பரமநாதன் (உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்), சர்வாம்பிகாதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், கந்தையா, ஆறுமுகம், பொன்னுத்துரை, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரவிநாத் (குவைத்), சுரேஷ்குமார் (சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை), திருமதி தயாளினி சுரேஷ்குமார் (ஆசிரியை, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), ரகுநாத் (பெல்ஜியம்), இரமணன் (லண்டன்), கோபிநாத் (கனடா), இந்தியாவில் வசிக்கும் சஞ்சீவன், சஞ்சிகா, சர்மிலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2006) புதன்கிழமை நண்பகல் 12மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
தாவடி, கொக்குவில்.
தொ.பே.:- 3294 / 6874
(55452)

தகவல்:
செ.பரமநாதன்,
(மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவீரர் வார நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.22

தாயக விடுதலைக்காய் தம் இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை நினைவு கூரும் எழுச்சிவாரம் தமிழீழம் எங்கும் நேற்று உணர்ச்சிபூர்வமாக ஆரம்பமாகியது.

வருடந்தோறும் தமிழீழம் எங்கும் இவ்வாரம் உணர்ச்சியுடன் அனுஷ்டிக்கப்படுவது வழமை.

காற்றோடு காற்றாய், கடலோடு கடலாய், மண்ணோடு மண்ணாய் மறைந்த மறப்புலி வீரர்களை நினைவுகூரும் நாளே மாவீரர் நாள்.

இதேவேளை -

மாவீரர் எழுச்சிவாரத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அதன் உணர்வுகளை உன்னதப்படுத்தும் மாவீரர் வாரம் நேற்று ஆரம்பமாகியது. குடாநாட்டில் வாழும் தமிழ் மக்கள், தமிழ் மாணவர்கள் அனைவரும் மாவீரர் எழுச்சி வாரத்தில் அஞ்சலி செலுத்த உணர்வுபூர்வமாக ஆயத்தமாகியுள்ளனர் - என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-203)

## அச்சுறுத்தலற்ற கற்றல் செயற்பாடுகளுக்கு உதவ சிறுவர் அமைப்புகளிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.22

பாடசாலை மாணவர்கள் மீதான அச்சுறுத்தல்களில் இருந்து மாணவர்களைப் பாதுகாக்க சிறுவர் அமைப்புகளும் மனித உரிமைகள் அமைப்புகளும் முன்வர வேண்டும் என்று தமிழ் மாணவர் ஒன்றியத்தின் யாழ்.இந்துக் கல்லூரிப் பிரிவு கோரியுள்ளது.

நேற்று முன்தினம் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் கல்லூரி வாசலில் வைத்துச் சோதனை செய்யப்பட்டமை தொடர்பாக விடுத்த அறிக்கையில் இப்படிக் கோரப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேற்றுமுன்தினம் பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்களாகிய நாம் வாசலில் காத்து நின்ற படைகளால் கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்பட்டோம். தரம் 6முதல் தரம் 13 வரையான மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் சரீர சோதனைக்கும், உடைமைச் சோதனைக்கும் உட்படுத்தி, கடுமையாக அச்சுறுத்திப் பாடசாலைக்கு அனுப்பினர்.

மிகுந்த அச்சத்துடனேயே பாடசாலை நேரத்தை கழிக்கும் நாம், பாடசாலை செல்ல அஞ்சுகின்றோம்.

சுதந்திரமாக கற்கும் உரிமை பறிக்கப்பட்ட நாம், பாடசாலைக்கு சும்மாவாவது சென்றுவர எமக்கிருந்த அற்ப சுதந்திரத்தையும் படையினர் பறித்துள்ளனர். சிறுவர் அமைப்புக்களும், மனித உரிமை அமைப்புக்களும் இவ்வாறான அச்சுறுத்தல்களை பார்த்துக்கொண்டு சும்மா இருத்தல் கூடாது. உடனடியாக எம்மைப் பாதுகாக்குமாறு மன்றாட்டமாக வேண்டுகிறோம்- என்றுள்ளது.

## டெங்கு தடுப்பு நடவடிக்கை காரைநகரில் தீவிரம்

காரைநகர், நவ.22

காரைநகர் பிரதேச சபையின் அனுசரணையுடன் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.பரமேஸ்வரன் தலைமையில் காரைநகர் பிரதேசத்தில் டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

துண்டுப்பிரசுரங்கள் மற்றும் ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வுப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன. (1-202-73)

## பாபாவின் அவதார தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ.22

யாழ். மத்திய ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம் நடத்தும் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 81 ஆவது அவதார தின நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை செட்டித்தெரு லேன், நல்லூர் என்னும் முகவரியில் அமைந்துள்ள சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதப் பெரியார்களின் ஆன்மீக உரைகள், பேராசிரியர் என்.ஞானகுமாரனின் 'சுவாமியின் அவதார மகிமை' என்னும் தலைப்பிலான ஆன்மீக உரை மற்றும் கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறவுள்ளன. (1-202)

* * *

யாழ்ப்பாணம், நவ.22

திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் நடத்தும் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 81 ஆவது அவதார தின நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 8.15 மணி தொடக்கம் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் இ.கணேசமூர்த்தியின் சிறப்புச் சொற்பொழிவு, ஆனந்தம், பரமானந்தம், பரீட்சித் ஆகிய நாடகங்கள் என்பனவும் இடம்பெறும். (1-202)

## ஏ-9 பாதை ஊடான உணவு விநியோகம்; ஜனாதிபதிக்கு நன்றி கூறுகின்றார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், நவ22

குடாநாட்டில் நிலவிவரும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கான தடையை நிவர்த்தி செய்யும் முகமாக ஏ-9 ஊடாகப் பொருள்களை எடுத்துவர ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்டுள்ள முயற்சிக்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குடாநாட்டு மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அமைச்சு ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

குடாநாட்டு மக்களின் நிலைமைகள் குறித்து நேரடியாகக் கண்டறிந்து அவற்றுக்கான உடனடித் தீர்வுகளை ஜனாதிபதியின் ஆலோசனைப் படி யாழ்ப்பாணத்தில் இருந்து மேற்கொண்டு வருகிறார்.

அமைச்சரிடமிருந்து ஜனாதிபதி அறிக்கை ஒன்றைக் கேட்டதற்கு இணங்க அவர் சமர்ப்பித்துள்ள அறிக்கைக்கு ஏற்ப இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடல் மார்க்கமாகப் பொருள்கள் கொண்டு வரப்படுகின்ற போதிலும் அவை உரிய முறையில் பொதுமக்களைச் சென்றடைவதில் பல்வேறு தடைகள் ஏற்பட்டுள்ளன.

இதேநேரம் ஏ-9 பாதை ஊடாக குடாநாட்டு மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம் தொடர்பில் மக்களின் நலன் சார்ந்து செயற்படும் அனைத்துத் தரப்பும் எவ்வித தடைகளும் இன்றி பூரண ஒத்துழைப்பு வழங்குவர் என குடாநாட்டு மக்கள் சார்பில அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எதிர்பார்கின்றார் - என்றுள்ளது. (1-203)

## சாயிபாபா பிறந்த தினமான நாளை சமாதானம் வேண்டிப் பிரார்த்தியுங்கள்

### சத்தியசாயி சேவா மன்றம் கோரியுள்ளது

யாழ்ப்பாணம், நவ.22

நாட்டில் சாந்தியும் சமாதானமும் வேண்டி நாளை வியாழக்கிழமை காலை 8.15 மணி முதல் 8.25 மணிவரை சகலரையும் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு வடபிராந்திய சத்ய சாயிசேவா நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.

கோயில்கள், வீடுகள், பாடசாலைகள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள், வங்கிகள் போன்ற சகல இடங்களிலும் இப் பிரார்த்தனையை நடத்துமாறும்-

சத்திய சாயி நிலையங்களில் குறிப்பிட்ட நேரத்தில் தொடர்ச்சியாகக் காயத்திரி மந்திரம் உச்சரிக்குமாறும் மன்றத்தினர் கேட்டுள்ளனர். (203)

## மிருசுவில் நீக்கிலஸ் தேவாலய உற்சவத்தை தவசிக்குளத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு

தென்மராட்சி, நவ.22

மிருசுவில் புனித நீக்கிலஸ் தேவாலய நவநாள் உற்சவம், அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு மிருசுவில் தவசிக்குளம் காணிக்கை மாதா தேவாலயத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்த உற்சவம் எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகி 5ஆம் திகதி திருநற்கருணை ஆராதனையும் திருப்பலிப் பூசையும் இடம்பெறும்.

மறுநாள் திருநாள் பாடல் பலிபூசையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

தேவாலய நவநாள் உற்சவம் வழமையாக நவம்பர் 27ஆம் திகதி ஆரம்பமாகி டிசெம்பர் 6ஆம் திகதி வரை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது: (202)

## தீர்வுக்கான பரிந்துரைகளை நிபுணர்கள் குழு வெளியிடும்

கொழும்பு,நவ. 22

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வினால் அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளுக்கான வல்லுநர் குழு, தனது பரிந்துரைகளை எதிர்வரும் வாரங்களில் சமர்ப்பிக்கக் கூடும் என்று கூறப்படுகிறது.

இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வுக்கு அடிப்படையாக, உள்ளக சுயநிர்ணய உரிமை, அதிக அதிகாரப் பரவலாக்கல் மற்றும் தேர்தல் சீர்திருத்தங்கள் ஆகியவற்றை இக்குழு பரிந்துரைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பரிந்துரைகள் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவிடம் விரைவில் கையளிக்கப்பட உள்ளன.

'கூட்டாட்சி' என்ற சொற்றொடர் இடம் பெறாமல் 2002 ஆம் ஆண்டு வரைவு அரசியல் சாசனத்துக்கு அப்பாலான அதிக அதிகாரப் பரவலாக்கல் என்கிற வகையில் இந்தப் பரிந்துரைகள் அமையக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

மேலும் ஜேர்மன் தேர்தல் சீர்திருத்தத்தையும், இந்திய ஆட்சி முறையிலிருந்து சில வற்றையும் ஸ்ரீலங்காவில் செயற்படுத்தலாம் என்றும் பரிந்துரைக்கப்படவுள்ளதாகத் அறியப்படுகிறது. விடுதலைப் புலிகள் முன் வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை வல்லுநர்கள் குழு நிரா கரித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இக்குழுவில் எச்.எல்.டி. சில்வா, கோமின் தயாசிறி, கே.எச்.ஜே. விஜேதாஸ, மனோகர டி சில்வா, தர்மசேகர பீரிஸ், அசோக குணவர்த் தன, றொஹான் பெரேரா, தெரேஸா பெரேரா, கே. விக்னேஸ்வரன், நிர்மலா சந்திரஹாசன், செல்வகுமாரன், சிவாஜி பீலிக்ஸ், ஆர்.கே.டபிள்யூ. குணசேகர, பாயிஸ் முஸ்தாபா, ஜயம்பதி விக்கிரமரட்ன மற்றும் மல்காந்தி விக்கிரமநாயக்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ஐ)

## மஹிந்தவைப்போல வேறு எவரும் இதற்கு முன் தமிழ் மக்களை பட்டினி போட்டுக் கொல்லவில்லை

### தமிழர்களைச் சாகடித்துக்கொண்டு பிறந்தநாள் கொண்டாடுகிறார் என மகேஸ்வரன் சாடல்



கொழும்பு, நவ 22

ஜனாதிபதிகள் ஜே.ஆர். ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாஸ, சந்திரிகா குமாரதுங்க போன்றோர் வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழ் மக்களைப் பட்டினி போட்டுக் கொல்லவில்லை. இந்த மஹிந்த ராஜபக்ஷ அரசு, தமிழ் மக்களைப் பட்டினியால் சாகடித்துக் கொண்டே இங்கு பிறந்த நாளையும், ஜனாதிபதி பதவியேற்ற ஒரு வருடப் பூர்த்தியையும் கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது என ஐ.தே.கட்சி எம்.பி., தி. மகேஸ்வரன், நேற்று நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டினார். அவர் தொடர்ந்து கூறியதாவது:-

''நாடாளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே வாகரைக்குப் பத்து லொறிகளில் உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டு விட்டதாகத் தெரிவித்தார். இருந்தும் வாகரைக்கு அனுப்பி வைக்கப்பட்ட லொறிகள் மாங்கேணி இராணுவச் சோதனைச் சாவடியில் வைத்துத் திருப்பியனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான சான்றுகள் எம்மிடம் உள்ளன''-என்றார்.

விமல் வீரவன்ஸ எம்.பி. (ஜே.வி.பி): வாகரைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள லொறிகள் ஐந்தைப் புலிகளே திருப்பி அனுப்பியுள்ளனர்.

அத்துரலியே ரத்ன தேரர்:- (ஜாதிக ஹெல உறுமய) வாகரைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள லொறிகளில் ஐந்தைப் புலிகள் கடத்திச் சென்றுள்ளனர். (ஐ)

## ஊழலில் சிக்கிய கடற்படை அதிகாரி வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றார்?

கொழும்பு,நவ.21

ஸ்ரீலங்கா கடற்படைக்கு ஆயுதக்கொள்வனவு செய்ததில் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட கடற்படை அதிகாரி ஒருவர் வெளிநாட்டுக்கு தப்பி ஓடி விட்டார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடற்படைக்கான ஆயுதக் கொள்வனவு மோசடிகள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்தி அறிக்கையை சமர்ப்பித்துள்ள நிலையில் அதிகாரி தப்பி ஓடியுள்ளார். இது தொடர்பாக ஸ்ரீலங்கா கடற்படைத் தலைமையகம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

கப்டன் தரத்திலான அந்த அதிகாரி, விசாரணை ஆணைக்குழு அறிக்கையை சமர்ப்பித்த நிலையில் தனது பொறுப்பைக் கைவிட்டு விட்டு தப்பிவிட்டார். கடற்படை தளபதியாக தயா சந்தகிரி பொறுப்பு வகித்த காலத்தில் நடந்த ஊழல்கள் தொடர்பான விசாரணை நடத்தப்பட்டது. தயா சந்தகிரி பொறுப்பு வகித்த காலத்தில் வடபோர்முனையில் கடற்படை அதிகாரியாக சர்ச்சைக்குரிய இந்தநபர் நியமிக்கப்பட்டிருந்தார். அவரே தற்சமயம் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார். தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளுக்கு அமைய அரசு [illegible] நடவடிக்கைகளை மேற்கொள்ளும் [illegible] (ஐ)

## ரவிராஜ் கொலை தொடர்பாக சபையில் எம்.பிக்கள் கருத்து

கொழும்பு, நவ.21

ரவிராஜ் கொலை தொடர்பா விசாரணைகளை அரசு இடைநிறுத்தியுள்ளதாகக் கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பி. தி. மகேஸ்வரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித் தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடராஜா ரவிராஜ் கொலை தொடர்பான விசாரணை கள் குறித்து தமிழ் எம்.பிக்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

**அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா:-**

நடராஜா ரவிராஜ் கொலை தொடர்பான விசாரணைகள் குறித்து விளக்கமளிக்கும்படி இச்சபையில் கேட்கப்பட்டது. ரவிராஜ் கொலை தொடர்பான விசாரணைகள் குறித்து எதுவும் கூறமுடியாதுள்ளது. இது குறித்து இச்சபையில் விளக்கமளிப்பது விசாரணைகளைக் குழப்புவதாக அமையும். விசாரணைகளில் முக்கிய திருப்பங்கள் ஏற்பட்டால் அது குறித்து இச்சபைக்கு அறிவிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

**இரா. சம்பந்தன் எம்.பி. (கூட்டமைப்பு):-**

''இந்த அரசு பதவிக்கு வந்த பின்னர் இடம்பெற்ற கொலைகள் குறித்து முறையான விசாரணைகள் நடத்தப்படவில்லை. இவ்வருடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நான்கு முக்கியஸ்தர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் சிவமகாராஜா, சந்திரநேரு, ஜோஸப் பரராஜசிங்கம், நடராஜா ரவிராஜ் ஆகியோரது கொலை குறித்து முறையான விசாரணைகள் நடத்தப்படவில்லை. நடராஜா ரவிராஜின் கொலை தொடர்பாக அரசுடன் நெருங்கிய சக்திகள் மீது குற்றஞ்சாட்டப்படுகிறது.''

**அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா:-**

''அது மட்டுமல்ல, லக்ஷ்மன் கதிர்காமர் கொலை தொடர்பான குற்றவாளிகளையும் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை நலன் பாராட்டு - 2006

### திருமதி தனலட்சுமி வெற்றிவேலாயுதம்பிள்ளை



35 வருட சேவை யைப் பூர்த்தி செய்து 05.09.2006 இல் எமது பாட சாலையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்ற உப அதிபர் அவர்களை எல்லாச்சிறப்புக்களையும் பெற்று வாழ வாழ்த்து கின்றோம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர்கள்,
(55467) ஆசிரியர் நலன்புரிச்சங்கம்.

யா/புலோலி மெ.மி.த.க.பா.,
புலோலி.

## குழு ரீதியான பிரத்தியேக வகுப்புகள்

### கல்வியாண்டு - 2007

தரம் 09, 10 மற்றும் 11

தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புகள்
இடம் : இல. 63, குமாரசுவாமி வீதி,
திருநெல்வேலி.

* வகுப்பொன்றில் 15 மாணவர்கள் மட்டுமே
* தனிப்பட்ட முறையிலான கவனிப்பு
* மாணவர் கல்வி விருத்தி தொடர்பான மேலதிக இலவச ஆலோசனைகள்
* அலகு ரீதியான மற்றும் மாதாந்தப் பரீட்சைகள்
* திறமையும் அனுபவமும் வாய்ந்த ஆசிரியர் குழாம்

அனுமதிக்கு முந்துதல் நெருக்கடியைத் தவிர்க்கும்
அனுமதிகள் 22.11.2006 பி.ப. 4 முதல்
'தரமான கல்விக்கான முறையான சேவை'

## UNIVERSITY OF MORATUWA

**Aptitude tests for selection of students for the courses in Bachelor of Information Technology, Bachelor of Design (Textile & Clothing), Bachelor of Architecture and Bachelor of Design (Architecture)**

The above aptitude tests will be conducted at 9.00 a.m. on 02.12.2006 (Bachelor of Information Technology) & Bachelor of Design (Textile & Clothing) and 09.12.2006 Bachelor of Architecture & Bachelor of Design (Architecture) in the Faculty of science of the University of Jaffna for the convenience of the students from the Jaffna Peninsula.

All those who have applied for these courses based on G.C.E (A/L) Examination 2006 from Jaffna District could appcar for the aptitude tests in Jaffna.

University of Jaffna,
Jaffna.
21.11.2006.

Prof.R.Kumaravadivel,
Actg.Vice-Chancellor.
(C.50436)

## உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம் (வ-து)

### கிளை முகாமையாளர் பயிற்சியாளர் (அமைய அடிப்படை)

மேற்படி பதவிக்கு சங்க எல்லைப்பரப்பிற்குள் வசிக்கும் 25 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

க.பொ.த. சாதாரண தரத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம்/எண் கணிதம், தமிழ் என்பனவற்றை உள்ளடக்கி 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பயிற்சிக்கு தெரிவுசெய்யப்பட்டு நியமனம் பெறும் பட்சத்தில் சங்கத்தால் கோரப்படும் பிணைத் தொகையைச் செலுத்தத் தயாராக இருக்கவேண்டும்.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 30.11.2006 இற்கு முன்னர் பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

தலைவர்,
உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்
(சி-50437)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### கனகரத்தினம் முகுந்தன்



மலர்வு 17 . 11 . 1967
உதிர்வு 23 . 10 . 2006

உடம்பை விட்டு உன் ஆவி பிரிந்தாலும்
நம் நெஞ்சைவிட்டு நீங்கிடுமோ உன் எண்ணம்
நீ இறக்கவில்லை மகனே - என்றும்
எங்கள் கண்ணில் நீ காலம் தோறும்
மலர்ந்து கொண்டேயிருப்பாய்.

உன்னை என்றும் மறவாத் அப்பா,
சகோதரர்கள், பெரியம்மாமார், மாமி.
(55458)

## தவறிவிட்டது

42/7, [illegible], [illegible] வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த கனகரத்தினம் பிரசாந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை (871312753V), விசேட அ.அட்டை (0901035213), சாரதி அனுமதிப்பத்திரம் (A013512596) மற்றும் மோட்டார் சைக்கிள் ஆவணப்பத்திரங்கள் என்பன 16.11.2006 யாழ்ப்பாணத்திற்கும் பண்டியன் தாழ்வுக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல்காணும் முகவரியில் (ரீகல் வீடியோ) ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். தொ.பே.: 021 222 9635 (55475)

## தேவை

* தரம் 5 முதல் 11 (O/L) வரையான பாடங்களை கற்பிப்பவர்கள்
* லிகிதர்/அலுவலக உதவியாளர்

30.11.2006 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாகி,
நியூ பிறைற் கல்வி நிலையம்,
யாழ்.மாட்டின் வீதி.

## பதவி வெற்றிடம்

1) வெல்டர்
2) தச்சுத்தொழிலாளி (கடைச்சல் அனுபவம் உள்ளவர்)

மேல்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்கள் E.U.T தளபாட விற்பனை நிலையம், 160C, K.K.S வீதி சுன்னாகத்தில் இயங்கும் தொழிற்சாலைக்கு தேவையாக உள்ளது. அனுபவம் வாய்ந்தவர்கள் 28.11.2006 இல் மேற்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு நேரில் சமூகம் தரவும்.

V.சிறிஸ்கந்தராஜா,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர்
மு.வேலாயுதபிள்ளை
அவர்களின் அன்புத் தாய்

### திருமதி முத்துத்தம்பி மனோன்மணி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.
(55476)

## கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் பொறுப்பாசிரியர்
மு.வேலாயுதபிள்ளை
அவர்களின் அன்புத் தாய்

### முத்துத்தம்பி மனோன்மணி

அவர்களது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கவலையையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாணவர் முதல்வர் சபை,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.
(55477)

## கண்ணீர் அஞ்சலி

சங்கானை பல நோக்குக்
கூட்டுறவுச் சங்க ஊழியர்
கந்தையா மனோவதனராசா
அவர்களின் அன்புத் தாய்
அராலி வீதி, சங்கானையைச் சேர்ந்த

### கந்தையா பொன்னம்மா

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சங்கானை ப.நோ.கூ. சங்க
பணியாளர், சிக்கன கடன் உதவு
கூட்டுறவுச் சங்கம்.

## மரண அறிவித்தல்

### தில்லைநடராஜா ரகுபரன்



(தலைவர், சுன்னாகம் சத்திய சாயி சேவா சமித்தியின் நிலைய இளைஞர் பிரிவு)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தில்லைநடராஜா ரகுபரன் நேற்று (21.11.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இறையடி சேர்ந்தார்.

அன்னார் தில்லைநடராஜா (முன்னாள் ஊழியர் - சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்) - கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும் கஜனின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2006) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
[illegible] வீதி,
மயிலணி, சுன்னாகம். (55484)
இ. தில்லைநடராஜா
(தந்தை)

## மரண அறிவித்தல்கள்

### அப்புத்துரை இராசபூபதி

சுதுமலையை, பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்புத்துரை இராசபூபதி நேற்று (21.11.2006) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சடாசிவம் - செல்லம்மா தம்பதியரின் புதல்வியும் அப்புத்துரையின் அன்பு மனைவியும் யோகராணி, வசந்தமலர், மல்லிகாதேவி, அன்புமலர், பரமசிவம் (நலன்புரி சங்கம் (Unico) யாழ். பல்கலைக்கழகம்), அற்புதம் ஆகியோரின் அன்புத் தாயும் தேவராசா, தர்மராஜா, சிவசுப்பிரமணியம், கௌரீஸ்வரன் (கனடா), சந்தானலஷ்மி (சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் இராசமலர், அமரர் பகவதி நித்தியானந்தவதி, அமரர் சிவராமகிருஷ்ணர், அமரர் சதானந்தன், சிவனேசதாஸ் ஆகியோரின் சகோதரியும் பாலமோகன், விஜயபாலன், யசோதரன், லோகராஜ், அகிலா, தர்மினி, வசந்தினி, சிவதர்சினி, கஜானன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2006) புதன் கிழமை பிற்பகல் 11 மணியளவில் பிப்பிலி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(55474)

தகவல்:
பிள்ளைகள்.

### திருமதி சண்முகநாதன் சிவபாக்கியம்



(நயினாதீவு)

நயினாதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பில் வசித்தவருமாகிய திருமதி சிவபாக்கியம் சண்முகநாதன் 20.11.2006 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தில்லைவனம் தம்பதியரின் (நயினாதீவு நாகபூஷணி அம்பாள்ஆலய முன்னாள் ஆதீனகர்த்தா) பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான இராமச்சந்திரர் - செல்லம்மா தம்பதியரின் (நயினாதீவு ஸ்ரீ இரட்டங்காலி முருகன் ஆலய முன்னாள் ஆதீனகர்த்தா) மருமகளும் காலஞ்சென்றவர்களான நடராசா, செல்லத்துரை, இராசம்மா, கணபதிப்பிள்ளை, கதிரேசு, கார்த்தியேசு, கந்தையா, நாராணபிள்ளை, விசுவலிங்கம் மற்றும் சிவகாமி, இராசரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான குமரையா, விநாயகமூர்த்தி, மங்களநாயகி ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான சிவரூபவதி, ஸ்ரீஸ்கந்தராசா, தனஞ்ஜெயராசா மற்றும் பத்மலோஜினி, கோகுலராசா, ருகுணாவதி, நாகாம்பிகை, தங்கராசா ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற தருமராசா மற்றும் தில்லைநாதன், கிருஷாம்பாள், ஜெயந்தி, சபாநாதன், சிவலிங்கம், நந்தாஜினி ஆகியோரின் அன்பு மாமியும் விநோதினி, ஸ்ரீக்காந்த், சதீசன், உஷாந்தினி, கஜவதனி, கோபிநாத், கோபிகா, தனச்செல்வி, கோபிதன், கோகுலன், தவப்பிரியா, தவச்செல்வி, சோபனா, புராதனி, கௌசிகன், கௌரீசன், கௌசிகா கஜனிகா, கதுர்ஷன், டிலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டிலக்ஷன், கிஷாலினி ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2006) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நயினாதீவு -5.
(55481)

தகவல்:
ச.கோகுலராசா (மகன்).

### தம்பிராசா கதிரமலைராசா (அப்பி)

பருத்தித்துறை, கல்லடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா கதிரமலைராசா நேற்று (21.11.2006) செவ்வாய்க்கிழமை அதிகாலை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் மகேந்திரனின் (சிவா) அன்புத் தந்தையும் யோகினிதேவியின் அன்பு மாமனும் காலஞ்சென்ற சிவயோகம், சிவபாதம், சரஸ்வதி மற்றும் சீவரெத்தினம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்மிகா, லிதுசன், செந்தூரன், சகீரன், கிருஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (21.11.2006) நடைபெற்று, கோரியடி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லடி ஒழுங்கை,
புலோலி வடக்கு,
பருத்தித்துறை.
(சி-50439)

தகவல்:
மகன், அக்கா,
பேரப்பிள்ளைகள்.

### திருமதி தர்சினி ஜெயக்குமார்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தர்சினி ஜெயக்குமார் நேற்று அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் கணேசபிள்ளை ஜெயக்குமாரின் (முன்னாள் ஊழியர்-மாநகரசபை) அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லத்துரை - இந்திராணி தம்பதியரின் அன்பு மகளும் கணேசபிள்ளை - யோகம்மாவின் அன்பு மருமகளும் தனுகாந்தின் அன்புத் தாயும், சாஜினி, அஜந்தினி, சுகாசினி, பிரதீபன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் லீலாவதி, காலஞ்சென்ற ஜெயசிங்கம் மற்றும் மனோகரன், பாஸ்கரன், சுசிலா, யாமினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2006) புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் இல. 28, சுப்பிரமணியம் வீதி, அரியாலையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 28, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
க.ஜெயக்குமார்
(கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## பாதை திறப்பு விவகாரத்தில் பின்னப்படும் சதி வலைத் திட்டம்

வடக்கில் யாழ். குடாநாட்டிலும், கிழக்கில் வாகரையிலும் பொங்கி எழுந்துள்ள பெரும் மனிதாபிமானப் பேரவலத்தைத் தீர்க்கும் விடயத்தில் இலங்கை அரசு அற்பத்தனமாக நடந்து கொள்கின்றது என்று குற்றம் சுமத்தியிருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

யுத்த நிறுத்தத்துக்கு வழி செய்துள்ள புரிந்துணர்வு ஒப்பந்த வாசகங்களுக்கு முரணாக, யாழ். குடாநாட்டுக்கான தரை வழிப் போக்குவரத்துப் பாதையை மூடியுள்ள இலங்கை அரசுத் தரப்பு, அதனால் எழுந்துள்ள மோசமான - மிக மோசமான - மனிதப் பேரவலத்தைத் தனது அரசியல், இராணுவ நோக்கங்களை எட்டுவதற்கு வாய்ப்பானதாக மாற்ற மிகநுட்பமாகக் காய்நகர்த்தல்களைச் செய்கின்றது.

யாழ். குடாநாட்டுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் மருந்து வகைகளை ஒரே தடவையில் எடுத்துச் செல்வதற்காக ஒரு முறை மட்டும் 'ஏ-9' தரை வழிப் பாதையைத் திறக்கத்தயார் என்ற மட்டுப்படுத்தலோடு கூடிய அறிவிப்பை -

அதுவும், இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமைகள், இலங்கை அரசின் ஒரு தலைப்பட்சமான நடவடிக்கைகளால் எழுந்துள்ள இந்த மனிதப் பேரவலம் குறித்துக் கூடி ஆராயவிருக்கையில் -

இலங்கை விடுத்திருப்பது, இந்த விவகாரத்தில் சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் அதன் இறுதி நேரத்தந்திரம் என்பது இப்போது வெளிப்படையாகவே புரியத் தொடங்கி விட்டது.

ஒரே சமயத்தில் பெரும் எண்ணிக்கையான லொறிகளில் அத்தியாவசியப் பொருள்களைக் குடாநாட்டுக்கு எடுத்துச் செல்வது என்ற யோசனைத் திட்டத்தை, சர்வதேச சமூகத்துக்குக் கண்துடைப்பாகக் காட்டும் முயற்சியாக இலங்கை அரசுத் தலைமை அறிவித்தாலும் கூட, அந்த அறிவிப்பின் மூலம் தனது சில கையாலாகத்தனங்களையும் அது ஒப்புக் கொண்டுள்ளது என்பது கண்கூடு.

* சமயத் தலைவர்களும், மக்கள் பிரதிநிதிகளும், மக்களும் சுட்டிக் காட்டியபடி குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்குப் பெரும் பற்றாக்குறை - தட்டுப்பாடு - நிலவுகின்றது.

* கடல் மார்க்கமாகப் போதிய அளவு அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டன என்று இதுவரை அரசு காட்டிய பூச்சாண்டி முற்றிலும் தவறானது.

* எதிர்வரும் வாரங்களில் வடக்கிற்குக் கப்பலில் பொருள்களைக் கொண்டு செல்வது,சீரற்ற காலநிலை காரணமாகச் சாத்திய மற்றதாகும்.

* குடாநாட்டில் வசிக்கும் ஆறு லட்சத்திற்கும் அதிகமான மக்களின் தேவையைக் கடல் மார்க்க விநியோகம் மூலம் நிறைவு செய்வது அசாத்தியமானது. தரைவழிப் பாதை மூலமான விநியோகம் தவிர்க்க முடியாத கட்டாயம்.

- இவ்வளவு விடயங்களையும் மேற்படி தனது அறிவிப்பு மூலம் அரசுத் தலைமை ஒப்புக் கொண்டுள்ளது - ஏற்றுக் கொண்டுள்ளது - என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

அவ்வாறு ஒப்புக் கொண்டு, அதன் காரணமாகப் பொருள் விநியோக நடவடிக்கைகளுக்காக மட்டும், சில கட்டுப்பாடுகளோடு ஒரு தடவையில் பொருள்களை எடுத்துச் செல்லப் பாதையைத் திறக்கவும், பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டகையோடு அதை மூடிவிடவும் எத்தனிக்கும் அரசுத் தலைமையின் நடவடிக்கை கூட, அதன் நோக்கம் - இலக்கு - குறித்து சில நிலைப்பாடுகளை வெளிப்படுத்துகின்றது என்பதும் கவனிக்கத்தக்கது.

* பாதையை மூடிய தனது ஒரு தலைப்பட்ச நடவடிக்கையால் எழுந்துள்ள மனிதப் பேரவலத்தைத் தற்காலிகமாகத் தணிய வைத்து, அதன் மூலம் சர்வதேச மட்டத்தில் தனக்கு எதிராக எழுந்துள்ள மனித உரிமை குற்றச்சாட்டுகளை இப்போதைக்குச் சமாளிப்பது.

* யாழ். குடாநாட்டுக்கு நிரந்தர விநியோக மார்க்கம் ஒன்றை வழங்காமல் அந்த மக்களையும், அவர்களது எதிர்காலத்தையும் தொடர்ந்து அந்தர - நெருக்கடி - நிலையில் தொங்க வைத்திருப்பது.

* குடாநாட்டு மக்களுக்குத் தேவையான அடிப்படை அத்தியாவசியப் பொருள்களை மட்டும் வழங்கி, அதன் மூலம் இவ்விடயத்தில் சர்வதேச ரீதியில் தற்போது தனக்கு எதிராக உருவாகியுள்ள கருத்தியல் நிலைப்பாட்டை ஒருபுறம் சமாளித்துக் கொண்டு, மறுபுறம் குடாநாட்டு மக்களுக்கான சுயாதீன - சுதந்திர - போக்குவரத்து மார்க்கங்களை அடைத்து வைத்துக் கட்டுப்படுத்தி அவர்களைத் திறந்த வெளிச்சிறையில் தொடர்ந்தும் பேணுவது.

- இவ்வாறு அரசின் இந்த மட்டுப்படுத்தப்பட்ட விநியோக மார்க்கத் திட்டம் பற்றிய அறிவிப்புக்குப் பின்னால் பல சூட்சுமங்கள், அர்த்தங்கள், ஒளிவுமறைவான நோக்கங்கள், தந்திரோபாயங்கள் புதைந்து கிடக்கின்றன. இலங்கை அரசுத் தரப்பின் மனதில் உள்ள இந்த உள்ளார்ந்த எண்ணங்கள் மற்றும் கபட நோக்கங்களைக் கருத்தில் கொண்டு, அதன் மேற்படித் திட்டத்தைப் புலிகள் நிராகரிப்பார்கள் என்பதும் அரசுத் தலைமைக்கு நன்கு தெரியும்.

அப்படிப் புலிகள் நிராகரிப்பதை வைத்துக் கொண்டு -

யாழ். குடாநாட்டில் மனிதப் பேரவலம் எழுந்துள்ளதாகக் குற்றம் சுமத்தும் விடுதலைப் புலிகள், அதைத் தீர்ப்பதற்கு நன்நோக்கோடு அரசு முன்வைத்த திட்டத்தை முறியடித்து, நிராகரித்து, தொடர்ந்தும் யாழ். குடாநாட்டு மக்களை மேலும் மனிதப் பேரவலத்துக்குள் ஆழ்த்த எத்தனிக்கின்றனர் என்றும் பிரசாரம் செய்யலாம் என்பதும் அரசுத்தரப்பின் திட்டம்.

ஒரே தடவையில் மட்டும் பொருள்களைக் குடாநாட்டுக்கு எடுத்துச் செல்ல பாதையை ஒரு முறை மட்டும் திறப்பது என்ற அரசின் உத்தேச யோசனைக்கு - அறிவிப்புக்கு - பின்னால் இத்தகைய பல உள்நோக்கங்கள் புதைந்து கிடக்கின்றன.

விடுதலைப் புலிகள் தரப்பை தமிழர் மத்தியிலும், சர்வதேச சமூகத்தின் முன்னாலும் வசமாகச் சிக்க வைக்கும் உள்நோக்கத்தோடு நேர்த்தியாகப் பின்னப்பட்ட சதிவலையே இந்த அறிவிப்பு

இந்தப் பொறியில் சிக்காமல் - அதேசமயம் குடாநாட்டு மக்களின் மோசமான நெருக்கடியையும், அவல நிலையையும் நீடிக்க அனுமதித்து அவர்களினதும், ஏனைய தமிழ் மக்களினதும், சர்வதேச சமூகத்தினதும் அதிருப்திக்கும் இடமளிக்காமல் - இவ்விவகாரத்தைப் புலிகளின் தலைமை எவ்வாறு கையாளப் போகின்றது என்பதே இன்றைய கேள்வியாகும்.

மனிதப் பேரவலத்தை உருவாக்கி, அதை அரசியல், இராணுவத் துரும்புச் சீட்டாக மாற்றும்-அதைத் தனது தந்திரோபாயச் சீட்டாக மாற்றும், வங்குரோத்து நிலைக்கு அரசு சென்றிருக்கிறது. உரிய முறையில் அதை எதிர்கொண்டு பதிலடி கொடுப்பது தமிழர் தரப்பின் பொறுப் பும், கடப்பாடுமாகின்றது.

# ஏ-9 பாதையைத் திறந்துவிடுவதே மக்களின் அவல வாழ்வுக்குத் தீர்வு

## சர்வதேச பிரதிநிதியிடம் யாழ். ஆயர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,நவ.22

குடாநாட்டில் மக்கள் எதிர்நோக்கும் அவல நிலைக்குத் தீர்வு காண ஒரே வழி ஏ-9 பாதையைத் திறப்பதுதான் என்று யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட வெளிநாட்டுத் தூதுவர்கள் அடங்கிய குழுவினரிடம் அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

குடாநாட்டு மக்கள் படும் அவலங்களை எடுத்துக்கூறிய ஆயர், அவர்களின் மனிதாபிமானத் தேவைகள் நிறைவு செய்யப்படவேண்டியதன் அவசியத்தை ஆயர் எடுத்து விளக்கினார்.

மக்களின் அவல வாழ்வுக்குத் தீர்வு கான வேண்டுமானால் ஏ-9 பாதையைத் திறக்கவேண்டும் என அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் ஆயர் எடுத்துவிளக்கினார்.

ஆஸ்திரேலியாவின் தூதர் கிறீக் பிரெஞ், சுவிஸ் நாட்டின் தூதர் ருத் பிலிண்ட், பிரிட்டனின் பிரதித் தூதர் லெஸ்லி கிரேக் ஆகியோருடன் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதிகள் சிலரும் யாழ்ப்பாணம் வந்துள்ள குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

ஐரோப்பிய ஆணைக் குழுவின் மனிதாபிமான உதவி அலுவலகத்தைச் சேர்ந்த (ECHO) பிரதிநிதி, கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவரகம் (CIDA), சுவிஸ் சர்வதேச அபிவிருத்திக் கூட்டு நிறுவனம் (SIDA), அபிவிருத்திக்கும், கூட்டுறவுக்குமான சுவிஸ் நிறுவனம் (SDC) ஆகியவற்றின் பிரதிநிதிகளும் தூதர்களுடன் யாழ்ப் பாணம் வந்துள்ளனர்.

இக்குழுவினர் குடாநாட்டில் செயற்படும் பல்வேறு சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் நேற்றுப் பேச்சுக்களை நடத்தினர்.

யாழ். அரச அதிபர் உட்பட பல்வேறு பிரமுகர்களையும் இவர்கள் சந்தித்தனர்.

இன்று வடமராட்சி, தென்மராட்சி ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களுக்குச் செல்லும் குழுவினர் அங்குள்ள நிலைமைகளையும் தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகளையும் நேரில் கண்டறிவர்.

(அ-1)

# வாகரைக்கு பொருள்கள் கொண்டுசெல்வதை படையினர் அல்ல, புலிகளே தடுக்கின்றனராம்!

## அரசு மீது பழிபோட வேண்டாம் என்று பிரதமர் வியாக்கியானம்



கொழும்பு, நவ.22

வாகரை மற்றும் கதிரவெளி போன்ற இடங்களுக்கு உணவுப்பொருள்களை அனுப்பவிடாமல் தடுப்பவர்கள் அரச படையினர் அல்லர். தமிழீழ விடுதலைப்புலிகள்தான். இந்த விடயத்தில் அரசின் மீது பழிபோடக் கூடாது. எனினும் புலிகளின் தடையை முறியடித்து பொருள்களை அனுப்புவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

- இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

வாகரைக்கு உணவுப் பொருள்களை அனுப்பவிடாமல் படையினர் தடுத்து வருகின்றமை குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனால் நேற்று நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணைக்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

தமிழர்களை மாத்திரமன்றி இந்த நாட்டில் எவரையும் பிரச்சினைக்குள்ளாக்க அரசு ஒருபோதும் விரும்பவில்லை. பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையில் மக்கள் எவரும் பாதிக்கப்படக்கூடாது என நாம் விரும்புகிறோம்.

வாகரைக்கு உணவுப் பொருள்களை கொண்டுசெல்லவிடாமல் புலிகள்தான் தடைவிதித்து வருகின்றனர் என மட்டக்களப்பு மாவட்ட இராணுவத் தளபதி கூறியிருக்கின்றார்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் உணவுப் பொருள்களை வாகரைக்குக் கொண்டுசெல்வதற்காக வரும்போது கறுத்தப்பாலத்தில் வைத்து அவர்கள் மீண்டும் திரும்பிவிடுகின்றனர். புலிகள் கறுத்தப் பாலத்தை அடைந்து தொடர்ந்து கஜுவத்தை படைமுகாம்மீது தாக்குதல் நடத்துவதுதான் இதற்குக் காரணம்.

இதுகுறித்து மட்டக்களப்பு இராணுவக் கட்டளைத் தளபதி, யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

வாகரையில் ஏற்பட்டிருக்கும் இந்தப் பிரச்சினை ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினை குறித்து நாம் மிகவும் வேதனைப்படுகிறோம். புலிகள் தொடர்ந்தும் கஜுவத்தை படைமுகாம் மீது ஷெல் தாக்குதல் நடத்தி பாதையை மூடி உணவுப் பொருள்களைக் கெண்டுசெல்லவிடாமல் தடைசெய்து வருகின்றபோதிலும் அதை முறியடித்து உணவுப் பொருள்களை அனுப்ப நாம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம் - என்றார்.

(க)

# ஈழத்தமிழர்களை பட்டினிபோடுவதே ஜனாதிபதி மஹிந்தவின் போர் உத்தி!

## சீறுகிறார் திருமாவளவன்



யாழ்ப்பாணத்துக்கான பிரதான நெடுஞ்சாலையை மூடுவதன் மூலம் ஈழத்தமிழர்களைப் பட்டினி போடுவதைத் தனது போர் உத்தியாக இலங்கை அரசு மேற்கொண்டுள்ளது என்று விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல்.திருமாவளவன் கடும் விசனம் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கண்டித்து 33 மணிநேர உண்ணாவிரதப் போராட்டம் மீனவர் மேம்பாட்டு சங்கம் சார்பில் சென்னையில் திங்கட்கிழமை ஆரம்பமானது.

அதில் திருமாவளவன் கலந்துகொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு தனது விசனத்தை வெளிப்படுத்தினார்.

இலங்கையில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களை இணைக்கும் தேசிய - பிரதான நெடுஞ்சாலையைக் கடந்த மூன்று மாதங்களாக இலங்கை அரசு மூடியுள்ளது.

இதனால் யாழ்.தீபகற்பம் தனிமைப் படுத்தப்பட்டுள்ளது. மாதம் ஒன்றிற்கு 13 ஆயிரம் தொன் உணவுப் பொருள் தேவைப்படுகிறது.

இந்நிலையில், கடந்த மூன்று மாதங்களாக மூன்றில் ஒரு பங்கு உணவுப் பொருள்களே கடல் வழியாக கப்பல் மூலம் யாழ்ப் பாணத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதனால் ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாட்டை பயன்படுத்தி இலங்கை இராணுவத்தினர் கள்ளச்சந்தையில் பொருள்களை விற்று வருகின்றனர்.

லட்சக்கணக்கான மக்கள் உணவுப் பொருள் தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால், விரைவில் பட்டினியால் சாவோர் எண்ணிக்கை அங்கு உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தமிழர்களை பட்டினி போடுவதன் மூலம் விடுதலைப் புலிகளை மறைமுகமாக வெல்லமுடியும் என மஹிந்த ராஜபக்ஷ நம்புகிறார். இதனை ஒரு போர் உத்தியாகவே அவர் கடைப்பிடிக்கத் துவக்கிவிட்டார்.

எனவே, இலங்கையில் வாழும் அப்பாவித் தமிழர்களைக் காப்பாற்ற இந்தியாவிலுள்ள தலைவர்கள் குரல்கொடுக்க வேண்டும். அப்போதுதான் இலங்கை அரசின் நிலையில் மாற்றத்தைக் கொண்டுவர இயலும். எதிர்வரும் 26ஆம் திகதி உத்திராஞ்சல் மாநிலம் - டேராடூன் நகரில் இடம்பெறும் மேயர்கள் மாநாட்டில் ராஜபக்ஷ கலந்து கொள்ளவுள்ளார்.

இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலையைக் கண்டித்தும், இலங்கை கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதை நிறுத்த கோரியும் இதை நடத்துகிறோம் - என்றார் திருமாவளவன்.

(க)

# வெளி மாவட்டங்களிலிருந்து வருவோர் இரத்தப் பரிசோதனை செய்ய அறிவுறுத்து

வலி.தென்மேற்கு,நவ.22

மன்னார் மடுப்பகுதியில் இருந்து அண்மையில் யாழ். மாவட்டத்துக்கு வந்த மக்களும் மற்றும் வெளிமாவட்டங்களில் தங்கியிருந்துவிட்டு இங்கு வந்தவர்களும் அண்மையில் உள்ள வைத்தியசாலைக்குச் சென்று இரத்தப் பரிசோதனை செய்து தமக்கு மலேரியாக் காய்ச்சல் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று அறிவுத்தப்பட்டுள்ளது.

யாழ். பிராந்திய மலேரியா தடுப்பு இயக்க வைத்திய அதிகாரி டாக்டர் கே.ரி.சிவபாதம் இந்த வேண்டு கோளை விடுத்துள்ளார். இதுபற்றி அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

யாழ். மாவட்டத்தில் மலேரியா நோய்த் தாக்கம் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் கடந்த 10 மாத காலத்தில் இரண்டு பேருக்கு மட்டுமே மலேரியா நோய்த் தொற்று இருப்பது இரத்தப் பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் மலேரியா நோய் தொற்றியுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது இங்கு பருவமழை பெய்து வருவதால் மக்கள் தமது வீட்டு வளவில் உள்ள சிரட்டைகள்,வெற்றுத் தென்னங்கோம்பைகள் ஆகியவற்றில் தண்ணீர் தேங்கியிருப்பதை கண்டறிந்து அவற்றை அகற்றவேண்டும். மக்கள் முன்னெச்சரிக்கையுடன் செயற்பட்டு [illegible] பெருக்கத்தைக் கட்டுப்படுத் [illegible] ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார்.

(1-135)

## நாளை

கார்த்திகை 07
வியாழக்கிழமை
23.11.2006
திதி : திருதியை
பின்னிரவு : 04.43
நட்சத்திரம் : மூலம்
பின்னிரவு : 4.47
[illegible] : 07.[illegible] - 09.[illegible]
[illegible] : 01.41 - 03.[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண எட்டு எம்.பிக்களுக்கு பதவி துறக்கக்கோரி கொலை மிரட்டல்

எதிர்வரும் நவம்பர் 27ஆம் திகதிக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் எட்டுப்பேரும் தமது எம்.பி. பதவிகளை துறந்துவிட வேண்டும் என்று கருணா அணியினரால் தொலைபேசி அழைப்புகள் மூலம் கோரப்பட்டிருக்கிறார்களாம்.

தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் என்ற கருணா அணியின் கட்சியின் சார்பில் தலைவரின் உத்தரவுகளுக்கமைய இந்தக் கோரிக்கையை விடுப்பதாகவும், தன்னை குணாளன் என்று இனங்காட்டிக் கொண்ட ஒருவர் இந்த ராஜினாமா கோரிக்கையைத் தங்களுக்கு தனித்தனியாக விடுத்ததாகவும், தவறினால் 'மாமனிதர்' பட்டம் சடலங்களுக்குச் சூட வேண்டி நேரிடும் என்று கொலை அச்சுறுத்தல் விடுத்ததாகவும் எட்டு எம்.பிக்களில் ஆறு பேர், கூட்டாக சபாநாயகருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பியான பரராஜசிங்கமும், நடராஜா ரவிராஜும் இப்படியான கொலைப் பயமுறுத்தல்களுக்குப் பின்னரே படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் இவர்கள் சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டுவந்திருக்கின்றனர்.

எம்.பிக்களின் உரிமைகளுக்கு பாதுகாவலனாக சபாநாயகரே இருந்து வருகிறார். இதனாலேயே இவர்கள், தங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தல் குறித்து சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டுவந்திருக்கிறார்கள்.

## பூநகரி, கிராஞ்சியில் நேற்று குண்டுவீச்சு

கிளிநொச்சி கிழக்குப் பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் கிபீர் விமானத் தாக்குதல் இடம்பெற்றது. பூநகரி, கிராஞ்சி ஆகிய பகுதிகளிலேயே குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. எனினும் குறிப்பிடத்தக்க சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது. (1)

# வாகரையிலிருந்து தமிழ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித அவலத்தைத் தடுக்க அரசு உடனடியாக உணவுப் பொருள்களையும், மருந்து வகைகளையும் அனுப்பி வைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இது அரசின் கடமையாகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கடந்த 16ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்தித்து வாகரை, கதிரவெளி பிரதேச மக்கள் பட்டினியால் வாடுவது குறித்து விளக்கி அங்கு உணவுப் பொருள்கள் உடனடியாக அனுப்பப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டது.

அன்றையதினம் 16ஆம் திகதி மாலையே உணவுப் பொருள்களும் மருந்து வகைகளும், வாகரை சென்றடையும் என உறுதியளிக்கப்பட்டது. இருந்தும் 16ஆம் திகதி வாகரைக்கு உணவுப் பொருள்கள் அனுப்பப்படவில்லை.

மட்டக்களப்பு கச்சேரியிலிருந்து வாகரை, கதிரவெளி பிரதேசங்களுக்கு 17ஆம் திகதி 10 லொறி உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டன. ஆனால், மாங்கேணி இராணுவ சோதனைச் சாவடியில் பிரிகேடியர் ரட்னாயக்கவினால் அந்த லொறிகள் மீண்டும் மட்டக்களப்புக்கே திருப்பியனுப்பப்பட்டன.

உணவு லொறிகளுடன் சென்ற அரச அதிபர், மாவட்ட செயலாளர் ஆகியோரிடம் பிரிகேடியர் ரட்ணாயக்க வாகரை கதிரவெளி பிரதேசங்களுக்கு உணவு லொறிகளை அனுப்பமுடியாது. அங்கு வசிக்கும் மக்களும், அகதிகளாகத் தஞ்சம் புகுந்த மக்களும் அப்பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

வாகரை கதிரவெளிப் பிரதேசங்களில் 12ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 8,500 குடும்பங்கள் திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஆட்லறி ஷெல் வீச்சுக் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள். அச்சம் காரணமாக இம்மக்கள் தமது உடைமைகளைக் கைவிட்டு வெறுங்கையுடன் வாகரைப் பிரதேசத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இப்போது இம்மக்கள் எதுவித தொழிலுமின்றி, எதுவித வருமானமுமின்றி அவல வாழ்க்கை நடத்துகின்றனர். சிறுவர்களும், குழந்தைகளும் பட்டினியால் வாடுகின்றனர்.

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியை இவர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். இருந்தும் கடந்த மூன்று மாதங்களாக அரச சார்பற்ற நிறுவனங்களை இப்பகுதிக்குச் செல்லவிடாமல் அரசும், இராணுவத்தினரும் தடை விதித்துள்ளனர். இந்த நிலையில் அரசின் உதவியையே அம்மக்கள் நம்பியிருக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. (க)

# மோசமான புற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் அரசியல் பணிகளைத் துறந்து ஒதுங்கியிருக்கிறார் என்பதும் தெரிந்ததே.

அவருக்குப் புற்றுநோய் மோசமாகப் பரவியிருப்பதை டாக்டர்கள் கடந்த வாரம் தான் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

வயிறு, ஈரல், சுவாசப்பை, எலும்பு மச்சைகள் எங்கும் புற்றுநோய் பரவியுள்ளதை உறுதிப்படுத்தியுள்ள வைத்தியர்கள் அது சுமார் ஒரு வருட காலத்துக்கு முன்னர் உருவாகி, உடல் எங்கும் பரவத் தொடங்கியிருக்கலாம் எனவும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

புற்றுநோய் காரணமாக வயிற்றிலும், ஏனைய உறுப்புகளிலும் அவருக்கு வலி மற்றும் கடும் நோவு, உடல் உளைவு உபாதைகள் எழுந்துள்ளன. இதைச் சமாளிப்பதற்காக அவருக்குத் தொடர்ந்து 'மோர்பின்' வலித் தடுப்பு மருந்து வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த வியாழனன்று அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சில பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டார். அவரது வயிற்றுக்குள் ஊசி ஒன்று செலுத்தப்பட்டு, அதன் மூலம் அவரது ஈரலின் சில சிறிய துண்டங்கள் சோதனைக்காகப் 'பியத்து' எடுக்கப்பட்டன. அந்தத் துண்டங்கள் மீதான புற்றுநோய்ச் சோதனை அறிக்கை மூலம் அவருக்கு ஏற்பட்டுள்ள புற்றுநோயின் வகையைக் கண்டறிய முடியும் என டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். அந்தச் சோதனை அறிக்கை இரண்டொரு நாள்களில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நோய் உபாதை காரணமாகத் தனது லண்டன் வீட்டில் தொடர்ந்து ஓய்வில் இருக்கும் அன்ரன் பாலசிங்கம், வலித் தடுப்பு மருந்து செலுத்தப்பட்டு நோவு தணியும் சமயங்களில் சரளமாக உரையாடுகின்றார்.

''தானமாகப் பெற்ற ஒரு சிறுநீரகத்தையும் எனது மூளையையும் தவிர, ஏனைய உடற்பகுதிகளுக்கு புற்றுநோய் பரவி விட்டது போலும்'' - என்று குறிப்பிட்டார் அவர். நோய் உபாதைகளுக்கு மத்தியிலும் மிகுந்த மனத்திடத்துடன் அவர் காணப்படுகின்றார். நோயின் எதிர் விளைவை எதிர்கொள்ளும் மனப்பக்குவத் தயார் நிலையில் தெளிவோடு அவர் இருக்கின்ற மையை அவரோடு உரையாடும்போது உணர முடிகின்றது.

தமது மோசமான உடல் நிலைமையை விடத் தனது தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றிய கருத்தே அவரது மனதில் ஆழப் பதிந்து, வெளிப்படுவதையும் உணர முடிந்தது. புற்றுநோய் எல்லை மீறிப் பரவியுள்ள நிலையில், அதற்கான சிகிச்சை ஏற்படுத்தக் கூடிய மோசமான நெருக்குதல்களைக் கருத்தில் கொண்டு, அந்த சிகிச்சையைத் தவிர்த்து, இயற்கையை எதிர்கொள்ள அவர் விரும்புகின்றார் போலும்.

இந்த நோய்க்கு அவர் தாக்குப் பிடித்து நிற்கக் கூடிய காலம் குறித்து சில உத்தேசத் தகவல்களை டாக்டர்கள், திருமதி அடேல் பாலசிங்கத்துக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள் எனவும் அறியவருகின்றது.

மாற்று சிறுநீரகம் பொருத்துவதற்கான அறுவை சிகிச்சையின் பின்னர், அந்தச் சிறுநீரகம் அவரின் உடலுடன் பொருந்திச் செயற்படுவதற்காகத் தொடர்ந்து வழங்கப்பட்ட உயர் வலிமையும், வீரியமும் மிக்க மருந்துகளே அவரின் உடலில் புற்றுநோயை - உடற்கலங்களின் அபரிதமான திடீர் வளர்ச்சியை - தோற்றுவித்திருக்கலாம் என டாக்டர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றார்கள். உயிருக்காகப் போராடும் நிலையை நோக்கி இந்நோய் அவரைத்தள்ளியிருக்கின்றது என்பதேதற்போதைய நிலைமையாகும். (உ)

# மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிரஸ் தலைவி சோனியா காந்தி உட்பட முக்கிய இந்தியத் தலைவர்களை ஜனாதிபதி சந்திக்க ஏற்பாடாகியுள்ளது.

''இந்தியா எமது அண்டையிலுள்ள மிகவும் நட்புறவான நாடு. எனவே, தற்பொழுது ஸ்தம்பித்துப் போயிருக்கும் விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையேயான சமாதானப் பேச்சுகள், இந்தியத் தலைவர்களுடனான சந்திப்பின்போது முக்கிய இடத்தைப் பெறும்'' என்று அரசுப் பேச்சாளரான அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்திருக்கிறார். (க)

# தமிழருக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக அதிகாரத்தில் இருக்கும் சிங்கள அரசியல் கட்சி ஒன்று குறிப்பிட்ட வரையறைக்குள் ஏதாவது சுயாட்சி யோசனையை சட்டமாக்குவதற்கு முனைந்தால், அதனை எதிரணியில் இருக்கும் சிங்களக் கட்சி எதிர்த்து நிற்கும். காலம் காலமாக நடந்து வரும் துரதிஷ்ட சம்பவங்கள் இவை.

எனவே, இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டுமானால், பெரும்பான்மையான சிங்களவர்கள் மத்தியில் தமிழர்களுக்கு எந்தளவு சுயாட்சியை வழங்கலாம் என்பது குறித்து ஒரு பொது இணக்கப்பாடு ஏற்பட வேண்டும். இதுவே, தீர்வுக்கு எடுத்து வைக்கும் முதல் அடியாகவும் இருக்கவேண்டும். இது மிகமிகப் பிரதானமானதாகும்.

**ஏற்புடையதாக இருக்காது**

இவ்வாறு ஒரு பொது இணக்கப் பாட்டுக்கு வரும் பொழுது சிங்களப் பெரும்பான்மையினர், தமது மனதில் நிறுத்திக் கொள்ளவேண்டிய விடயமொன்று உண்டு. அதாவது, தமிழர்களுக்கு வழங்கப்படும் சுயாட்சியானது அர்த்த புஷ்டியானதாகவும், அதேவேளை நடைமுறைக்குச் சாத்தியமானதாகவும் இருக்க வேண்டும். இதனைச் சிங்களப் பெரும்பான்மையினர் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இன்றேல், தமிழர்கள் அத்தகைய தீர்வை ஏற்க மாட்டார்கள். ஏற்புடையதாகவும் இருக்காது.

இவ்வாறு சிங்களத் தேசியத்தின் பொது இணக்கப்பாட்டின் ஆதரவோடு எட்டப்படும் உடன்படிக்கைகள், நம்பகத்துக்கு உரிய மூன்றாம் தரப்பு ஒன்றினால் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டியதும் அவசியமாகும். ஏனெனில், இதற்கு முன்னர் அரசுக்கும், தமிழ்த் தலைவர்களுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட பல்வேறு உடன்படிக்கைகள் எதுவும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுஇருக்கவில்லை. கைவிடப்பட்டே வந்திருக்கின்றன. அதனாலேயே இந்த மூன்றாம் தரப்பின் உத்தரவாதம் வேண்டியிருக்கிறது.

எட்டப்படும் சமாதானத்துக்கு உத்தரவாதமளிக்கும் பாத்திரத்தில் இந்தியா பங்குபற்ற முடியாது. இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையே இதற்குக் காரணம். இந்தக் கொலையை விடுதலைப் புலிகளே செய்திருக்கிறார்கள்.

**போர் மூட்டங்களை தணிப்பதே உடனடித்தேவை**

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட இயக்கமாவும் புலிகள் இயக்கம் இருந்து வருகிறது. இந்திய நீதிமன்றத்தால் புலிகளின் தலைவர் பிரபாகரனும் இந்தக் கொலையில் குற்றவாளியாகக் காணப்பட்டிருக்கிறார். எனவே, விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையே இப்பொழுது அனுசரணையாக இருந்து பணியாற்றும் நோர்வேயே இந்த உத்தரவாதப் பாத்திரத்தை ஏற்க வேண்டும். இதற்குச் அவர்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகளை நாடலாம்.

இதேவேளை, இப்பொழுது உடனடியாகச் செய்ய வேண்டியது, இலங்கையில் தற்போது நிலவுகின்ற ஆபத்தான நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து போர் மூட்டங்களைத் தணிப்பதேயாகும். அண்மையில் நடந்த ஜெனிவாப் பேச்சுகள் கூட எந்தவொரு முக்கிய விடயத்தையும் விவாதிக்கக் கூட எடுத்துக் கொள்ளாத முறையில் தோல்வியில் முடிந்திருக்கிறது. எனவே தான் இன்றைய நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது அவசியமாகி உள்ளது.

- இவ்வாறு முன்னாள் இந்தியத் தூதுவர் சத்வால் தனது கட்டுரையில் தெரிவித்திருக்கிறார்.

# புதிய மூலோபாயம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்க வேண்டிய விடயங்களைக் குறிப்பிட்டு வெளியிடப்பட்ட கூட்டறிக்கை, அதன்பிறகு நடைபெற்ற பேச்சுகள் ஆகியன குறித்தும், வடக்கு- கிழக்கில் ஏற்பட்டிருக்கும் மனிதாபிமான நெருக்கடி பற்றியும் நேற்று ஆரம்பமான இந்த மாநாட்டில் வாதிக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதான முயற்சிகளை ஊக்குவிப்பதற்கான புதிய மூலோபாயங்கள் தொடர்பாக இணைத்தலைமைப் பிரதிநிதிகள் கவனம் செலுத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**கால வரையறை விதிக்கப்படலாம்**

தொடரும் மோதல்களை நிறுத்துமாறு தரப்புகளை மீண்டும் இணைத்தலைமை கோரும் என்றும் சமாதான முயற்சிகள் தொடர்பில் தரப்புகள் உரிய நடவடிக்கைகளை நோக்கி நகர்வதற்கான ஒரு கால வரையறை விதிக்கப்படுவது குறித்தும் இணைத்தலைமை இந்தத் தடவை பிரேரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் ஆரம்பமாகிய மாநாடு குறித்துக் கருத்து வெளியிட்ட அமெரிக்காவின் ராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர், 'எங்களால் எவ்வாறு உதவ முடியும் என்பது குறித்து விவாதிக்கிறோம்' என்று தெரிவித்தார்.

நீண்டகாலமாகத் தொடரும் இந்த நிலைமைக்கு சமாதான முயற்சிகளை ஒரு தீர்வை நோக்கி முன்னெடுப்பதே முக்கியமானது என்று நாங்கள் நினைக்கிறோம். - என்றும் அவர் கூறினார்.

இணைத்தலைமை மாநாட்டில் அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் நிக்கலஸ் பேர்ண், தென்னாசியாவுக்கான உதவிச் செயலாளர் ரிச்சாட் பௌச்சர் ஆகிய இருவரும் கலந்துகொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஏ-9 பாதையைத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

**கடல் மூலம் அனுப்புவது இயலாத காரியம்**

''நாட்டின் அனைத்து மக்களினதும் தேவைகளைத் தீர்த்து வைப்பது அரசின் கடமை. வடக்கு மக்களும் நம் நாட்டு மக்களே. அவர்களை இந்நிலையில் பரிதவிக்க விட்டுவிட முடியாது. தற்போது யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள அங்குள்ள மக்களுக்கு நிவாரணப் பொருள்களை அரசு உடனடியாக வழங்க வேண்டும். அதற்குக் கடல் மார்க்கமாகப் பொருள்களை அனுப்புவதென்பது முடியாத காரியம். 'ஏ-9' பாதை ஊடாக விரைவாக உணவுப் பொருள்களை அனுப்பி வைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதற்கு 'ஏ-9' பாதையை அரசு திறந்துவிட வேண்டும்.

அங்குள்ள அப்பாவி மக்களின் கஷ்டங்களை உணர்ந்து உணவுப் பொருள்களை அனுப்புவதற்காக அரசு 'ஏ-9' பாதையைத் திறந்துவிடும்போது விடுதலைப் புலிகள் அதனைத் தவறாகப் பயன்படுத்துவார்களேயானால் அவர்களுக்கு எதிராக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு நாம் ஒத்துழைப்புத் தருவோம்.'' - என்றார் திஸ்ஸ அத்தநாயக்க.

''தற்போது எமது கட்சியில் பல சிக்கல்கள் நிலவி வருவதாகப் பலர் விமர்சனம் செய்கின்றனர். இந்நிலை குறுகிய காலத்திற்குள் நீங்கிவிடும். எமது கட்சியின் எதிர்த் தரப்பினர் முன்வைக்கும் யோசனைகளுடன் எமது யோசனைகளும் ஒத்துப் போகும் பட்சத்தில் கட்சிகளின் பிணக்குகள் நீங்கி நாம் ஒன்றிணைவோம். எக்காரணம் கொண்டும் எமது கட்சி உடையமாட்டாது'' எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனித்தனியாக மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

மூன்று இடங்களிலும் நடத்தப்பட்ட பரிசோதனைகள் மூலம் ஐந்து மாவட்டங்களில் இருந்து கிடைத்த மாதிரிகள் ''சிக்குன்குனியா'' நோய்க்கான தன்மை கொண்டவை என்று கண்டறியப்பட்டுள்ளது.

இது குறித்து சுகாதாரப் பகுதியின் தொற்றுநோய்த்தடுப்புப் பிரிவு சகல சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர்கள் அலுவலகங்களுக்கும் அறிவித்திருக்கிறது.

இதே வேளை -

யாழ்ப்பாண மாவட்டத்தின் இணுவில், உடுவில், தாவடி, சுதுமலை, கோண்டாவில் ஆகிய பகுதிகளில் பரவிவரும் வைரஸ் காய்ச்சல் ''சிக்குன்குனியா'' எனச் சந்தேகிக்கப்பட்டதால் அப்பகுதிகளில் நோயாளர்களிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகள் தொற்றுநோய்த்தடுப்புப்பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவற்றின் பரிசோதனை முடிவுகள் இங்கு வந்து சேர்வதற்கு ஆகக்குறைந்தது இன்னும் இரண்டு வாரங்கள் செல்லும் என்று சுகாதாரசேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதற்கிடையில் சிக்குன்குனியா குறித்து விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுதோறும் முடுக்கிவிடப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.11.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org